# வரலாறும் கலையும்

ஆசிரியர் :

**கு. தாமோதரன்**

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியீடு :

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி, சென்னை - 600 113

1999

தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு எண். 142

முதற் பதிப்பு 1999 — 500 பிரதிகள்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10149
LIBRARY,
MADRAS-28.

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

954·82
தாமோ

வரலாறும் கலையும்

ஆசிரியர் :
கு. தாமோதரன்

விலை : ரூ.

அச்சிட்டோர் :

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உள்ளடக்கம்


| வ. எண். | | பக். எண் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | திருத்தாமரைப்பாக்கம் .... | 1 |
| 2. | திருப்புட்குழி .... | 7 |
| 3. | கரவந்தபுரம் .... | 13 |
| 4. | ஸ்ரீ வீரபாண்டிய தேவர் கல்வெட்டு ஓர் ஆய்வு .... | 17 |
| 5. | பண்டாரம் .... | 21 |
| 6. | புடவை .... | 34 |
| 7. | கரூர் முத்திரை மோதிரங்கள் .... | 39 |
| 8. | காஞ்சியும் கலைகளும் .... | 41 |
| 9. | ஏறூரும் பெருமான் .... | 47 |
| 10. | டாக்டர் ஆனந்தகுமாரசாமியின் கலைத்தொண்டு .... | 49 |
| 11. | விக்டோரியா மகாராணியின் வெள்ளிப் பட்டயம் ... | 55 |
| 12. | நாடகக் கலை ... | 58 |
| 13. | பூண்டி - தொல் பழங்கால மக்கள் வாழ்விடம் .... | 65 |

# முன்னுரை

வரலாறும் கலையும் என்ற இந்நூல் ஆய்வுக்கட்டுரை களின் தொகுப்பாக அமைந்துள்ளது. தமிழகத்தின் வரலாறு, கலைக்கூறுகளை இந்நூல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. தமிழகத்தின் பண்டைய நீதிமுறை, பண்பாடு, வரலாற்றுச் சிறப்பு ஆகியவற்றை அறிந்து கொள்ளக் கல்வெட்டுகள் மூலச் சான்றுகளாக விளங்குகின்றன. தாமரைப்பாக்கம், திருப்புட்குழி, கரவந்தபுரம், குரங்காடுதுறை ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளின் மூலம் அவ்வப் பகுதியின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

கலைகள் என்ற பிரிவில் 'காஞ்சியும் கலைகளும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை அமைந்துள்ளது. காஞ்சி என்றாலே நமக்கு நினைவிற்கு வருவது அங்கு அமைந்துள்ள கோயில்களும் அவற்றின் கலையழகுமாகும். பல்லவர் கலைக்கு ஆற்றிய தொண்டு ஈடு இணையற்றது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காஞ்சி கைலாசநாதர் கோயில் உள்ளது. இதில் அமைந்துள்ள சிற்பங்களின் அழகே தனி. அதன்மீது சுதை பூசி வண்ணம் தீட்டியுள்ள பாங்கு பல்லவர் காலத்தில் ஓவியக்கலை எவ்வாறு சிறப்புற்று விளங்கியது என்பதைக் காட்டும் சான்றாக அமைந்துள்ளது. பல்லவர்களின் துறைமுகப் பட்டினமான மாமல்லையும் கலைச்சிறப்பு வாய்ந்த தாகும். இந்நூலின் பிற்பகுதியில் கலைக்குப் பெரும் தொண்டாற்றிய டாக்டர் ஆனந்த குமாரசாமியின் கலைத் தொண்டு பற்றிய கட்டுரை இடம் பெறுகிறது. நாடகக் கலை தமிழகத்தில் எவ்வாறு சிறப்புற்று விளங்கியது என்பதைப் பற்றியும் ஒரு கட்டுரை விளக்குகிறது. நூலின் இறுதிக் கட்டுரை ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்மாந்தர் வாழ்விடத்தைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. பொதுக் கட்டுரைகளாக சில அமைந்துள்ளன.

பண்டாரம் (கருவூலம்), கரூர் முத்திரை மோதிரங்கள், விக்டோரியா மகாராணியின் வெள்ளிப் பட்டயம், ஏறூரும் பெருமான் ஆகியன இவ்வகையில் அடங்கும்.

இந்நூலினை அச்சிடுவதற்குப் பிழைத்திருத்தம் செய்து உதவிய இத்துறை உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர் முனைவர் நா. மார்க்சியகாந்தி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை உடன் அச்சிட்டு வெளிக்கொணர்ந்த உதவிப் பணி மேலாளர் திரு. ச. செங்கல்வராயன் மற்றும் முதுநிலை முதலாள் திரு. மு. சீனிவாசன் ஆகியோருக்கும், மற்றுமுள்ள அச்சுப் பிரிவினருக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கு. தாமோதரன்
இயக்குநர்

# I

# திருத்தாமரைப்பாக்கம்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தில் செங்கம்-போளூர் நெடுஞ்சாலையில் கடலாடிக்குத் தெற்கே ஐந்து கி. மீ. தொலைவில், செய்யாற்றின் தென்கரையில் 'தாமரைப்பாக்கம்' என்ற சிற்றூர் அமைந்துள்ளது. கல்வெட்டுகள் இவ்வூரைத் 'திருத்தாமரைப்பாக்கம்' என்று குறிக்கின்றன. செயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து, காந்தளூர்க் கூற்றத்துப் புதநலப்பாடி நாட்டில் திருத்தாமரைப்பாக்கம் அமைந்திருந்தது.

திருத்தாமரைப்பாக்கத்திற்கு அழகூட்டுகின்ற வகையில் இங்கு திருஅக்னீசுவர மகாதேவர் கோயில் விளங்குகிறது. இக்கோயிலின் கட்டட அமைதியினை நோக்கும்பொழுது இது முதலாம் பராந்தகனுக்கு முன்னதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. சோழர் காலக் கட்டடக் கலைக்கு இக்கோயில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## கல்வெட்டுகள்

இக்கோயிலிலிருந்து 29 தமிழ்க் கல்வெட்டுகள் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் படியெடுக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் இந்நூல் ஆசிரியர் கல்வெட்டு ஆய்வாளராக பணியாற்றிய பொழுது முதன் முதலில் கண்டு பிடிக்கப்பெற்றவையாகும். சோழர், காடவராயர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை முதலாம் பராந்தகன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன், கோப்பெருஞ்சிங்கன் ஆகிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளாகும்.

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் இக் கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

அப்பொழுது ஏற்கெனவே பொறிக்கப்பட்டு, சிதிலமடைந்திருந்த கல்வெட்டுகள் திரும்பவும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 25 கல்வெட்டுகள் சோழர்கள் காலத்தைச் சார்ந்தவையாகும். இவற்றுள் காலத்தால் முந்தையது முதலாம் பராந்தகனின் 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். முதலாம் பராந் தகன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதித்தன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் திருஅக்னீசுவர மகா தேவர்க்கு நுந்தாவிளக்கெரிப்பதற்குப் பொன், நிலக்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கின்றன. இது தவிர அறக்கொடை களும் குறிக்கப்படுகின்றன. தேவதான நிலங்கள் ஜென்மக் காணி, திருமுக்காணி ஆகிய நிலங்களை வைத்திருப்பவர்கள் தினப்படி வழிபாட்டிற்குக் கொடை கொடுத்தது குறிக்கப் படுகிறது.

## சித்திரமேழிப் பெருக்காளர்

இரண்டாம் இராசேந்திரனின் ஐந்தாவது ஆட்சி யாண்டைச் சார்ந்த கல்வெட்டு 'சித்திரமேழிப் பெருக்காளரை'க் குறிக்கிறது. முற்காலத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்கென்று தனிக் கூட்டமைப்பை வைத்திருந்தனர். அதற்குச் 'சித்திரமேழிப் பெரியநாட்டார்' என்று பெயர். மற்ற குழுக்களில் இருந்து இதன் தனித் தன்மையை வெளிப்படுத்து கின்ற வகையில் இதற்குத் தனியாக ஒரு அமைப்பு இருந்தது. இவர்களுக்கென்று தனியாக ஒரு மெய்க் கீர்த்தியே உண்டு. இவர்கள் தம்மைப் 'பூமிபுத்திரர்கள்' எனக் கூறிக்கொண்டனர். இவர்கள் தங்களுடைய உரிமையினை நிலை நாட்டுகின்ற வகையில் சித்திரமேழி விதிமுறை என்ற ஒரு விதி முறையினை அமைத்துக் கொண்டனர். சமூக அமைப்பில் இப்பிரிவு 'நாடு' என்றும், இதன் உறுப்பினர் 'நாட்டார்' என்றும் அழைக்கப்பட்டனர். பல நாடுகள் ஒன்று சேர்ந்த அமைப் பிற்குப் பெரிய நாடு என்று பெயர். இதில் ஈடுபாடு கொண்ட மக்கள், 'பெரிய நாட்டார்' 'பெருக்காளர்' என்று அழைக்கப் பட்டனர். இந்த அமைப்பு இரண்டாம் இராசேந்திரன் ஆட்சிக் காலத்திலிருந்து 'இராசேந்திர சோழ சித்திரமேழிப் பெரிய நாடு' என்று அழைக்கப்பெற்றது.

சித்திரமேழிப் பெருக்காளர் சபையார் ஒரு விசித்திர மான வழக்கினை விசாரித்தனர். தருப்பேருடையான் தாழிக் கோன் என்பவன் அவ்வழக்கினைச் சபையின் முன் வைக்

கிறான். இவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். ஒருவன் பெயர் சங்கரத்தடியன். மற்றவன் பெயர் பெரியான் என்பதாகும்.

மேற்காணும் இருவருக்கும் பூசல் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அண்ணன் தம்பியை அடிக்கிறான். அப்பொழுது தம்பிக்குக் கோபம் உண்டாகி, அண்ணனை அடிக்க அண்ணன் இறந்து விடுகிறான். இதனைக் கேள்வியுற்ற 'பெருக்காளர் சபையார்' தருப்பேருடையான் தாழிக்கோன் என்பவனிடம் உங்களுக்கு இளையவனைத் தவிர வேறு பிள்ளைகள் குடும்பத்தைக் காப்பாற்ற இருக்கின்றனரா? என்று கேட்க, தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வேறு பிள்ளை யாரும் இல்லையென பதில் அளித்தான். இளையவன் செய்தது கடுமையான கொலைக் குற்றமாக இருந்தாலும் இவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்காக இளையவன் இறத்தல் வேண்டாம் என்றும் 'அவன் செய்துள்ள பாவச் செயலுக்குப் பரிகாரமாகத் திருஅக்னீசுவரமுடையார் கோயிலுக்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு வேண்டிய செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனச் சபையார் தீர்ப்பளித்தனர். மரண தண்டனை விதிக்க வேண்டிய ஒருவனுக்கு அவனுடைய வயதான தாய் தந்தையரின் ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை கருதியும், அவர்களுக்கு வேறு யாரும் ஆதரவு இல்லை என்பதைக் கருதியும் இவனுக்கு மரண தண்டனை விதிக்காமல் ஊர்ச்சபையார் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தீர்ப்பளித்துள்ளது அக்கால சமுதாயத்தில் நிலவிய நீதி நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகிறது.

### நாட்டார்

விவசாயப் பெருங்குடி மக்களின் சமூக அமைப்பின் அடிப்படை 'நாடு' என்பதாகும். இதில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் 'நாட்டார்' என்று அழைக்கப்பட்டனர். நாட்டார்கள் வேளாண் வகை ஊர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆவார்கள். நாட்டார்கள் சபை, வேளாள சமூகத்தைச் சார்ந்த மக்களின் பாதுகாப்பிற்கும் வேளாளப் பெருங்குடி மக்களின் நன்மைக்காகவும் பெரிதும் பாடுபட்டது.

இரண்டாம் இராசேந்திரனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பல்குன்றக்கோட்டம், வெண்குன்றக்கோட்டம், பனையூர், திருமுனைப்பாடி, மிலாடு என்கிற ஜனநாத வள நாடு, புதநல்பாடி, பங்களநாடு மற்றும் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் உள்ள உத்தமசோழ வளநாடு ஆகிய பகுதி களில் உள்ள நாட்டார்கள் அனைவரும் திருஅக்னீசுவர மகா தேவர் கோயிலில் வேளாள சமூகத்தைச் சார்ந்த மக்களின் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்வதற்கும், நிலவரியை நிர்ணயம் செய்வதற்கும் கூடியதைக் காட்டுகிறது. நாட்டார் களால் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பதினாறு சாண்கோலால் அளிக்கப்பட்ட ஒரு வேலி நீர் நிலத்திற்கு வரியாக விவசாயிகள் 50 கலம் நெல்லை அருள்மொழி தேவன் மரக்காலால் அளந்து கொடுத்தல் வேண்டும். கார் நிலமாக இருந்தால் ஒரு வேலி நிலத்திற்கு வரியாக 40 கலம் நெல்லை ஒவ்வொரு விவசாயியும் அளித்தல் வேண்டும். புன்செய் நிலமாக இருந்தால், ஒரு வேலிக்கு இறையாக மூன்று காசு அளித்தல் வேண்டும். விவசாயப் பெருங்குடி மக்களிடத்தி லிருந்து நில வரியினைப் பண்டாரம் (கருவூலம்) வசூலித்தல் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைக் கல்வெட்டு 'திருவாணை' என்று குறிக்கிறது. இத்திருவா ணையைச் சித்திரமேழிப் பெரிய நாட்டைச் சார்ந்த பட்டன் என்பவன் எழுதியுள்ளான்.

திருத்தாமரைப்பாக்கம் திருஅக்னீசுவரர் திருக்கோயிலி லுள்ள கல்வெட்டுகளில், சோழ மன்னன் மூன்றாம் குலோத் துங்கனின் காலத்தைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகள் அக்காலத்தில் நிலவிய 'உடன்கட்டை ஏறும்' வழக்கத்தை நமக்குத் தெரிவிக்கின்றன.

சோமன் பிரிதிகங்கன் என்பவனுடைய தந்தை, கூத் தாடும் தேவரான பிரதிகங்கர் என்பவர் கூத்தாடும் தொழிலில் வல்லவராய் விளங்கினார். இவர் திருஅக்னீசுவரர் மகாதேவர் கோயிலில் கூத்தாடும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவருடன் பெண்ணொருத்தியும் பாடும் தொழிலில் ஈடுபட்டிருந்தாள். பிரிதிகங்கர் இறந்துபட்டபொழுது இவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண்ணொருத்தியும் பள்ளிகொண்டாளென்ற செய்தி யினைக் கல்வெட்டு ''கூத்தாடும் தேவரான பிரிதிகங்கருடன் பள்ளி கொண்ட பாடும் பெண்ணும்'' என்று குறிக்கிறது. இவள்

இறந்துபட்டதால் இவளுடைய குடும்பத்திற்கு ஏற்பட்ட வருத்தத்தையும், இழப்பையும் போக்குவதற்கு இவளுடைய சந்ததியினருக்கு நிலம் கொடையளிக்கப்பட்டது குறிக்கப் படுகிறது.

முதலாம் பராந்தகனின் தந்தையான முதலாம் ஆதித்தன் பள்ளிகொண்ட பிறகு அவனது நினைவாகப் பள்ளிப் படையாகத் தொண்டை நாட்டில் ஆதித்த ஈசுவரமுடையார் கோயில் பராந்தகனால் எடுப்பிக்கப்பட்டது. இதைப் போலவே ஆற்றூரில் பள்ளிகொண்ட அரிஞ்சயனுக்காக முதலாம் இராச ராசன் மேல்பாடி என்ற ஊரில் அரிஞ்சிகை ஈஸ்வரர் கோயிலை எடுப்பித்தான்.

இங்கு பள்ளிகொண்ட பாடும் பெண்ணின் குடும்பத் தாருக்குச் சோமன் பிரிதிகங்கர் அறக்கொடையாக நிலம் அளித்துள்ளார். இந்த நிலம் பதினாறு சாண் கோலால் அளந்து விடப்பட்ட ஒரு வேலியாகும் (இருபது மா). இதை இவளுடைய சந்ததி உள்ள வரை ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இந்த நிலத்திற்குச் சோமன் பிரிதிகங்க ருடைய வழிமுறையைச் சார்ந்தவர்கள் தீங்கு செய்ய நினைத் தால் அவர்கள் பாவத்தில் போவார்களாக என்று கல்வெட்டு குறிக்கிறது. கணவன் இறந்துபட்ட பொழுது மனைவியும் உயிர்நீத்தல் (உடன் கட்டை ஏறுதல்) வேண்டும் என்ற பழக்கம் தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்கின்றது. சுந்தர சோழனின் பட்டத்தரசி வானவன் மாதேவி என்பவள் மன்னன் இறந்தபொழுது அவன் இழப்பைத் தாங்க மாட்டாதவளாய்த் தீப்பாய்ந்தாள் என்பதையும் அறிகிறோம்.

கணவனுடன் மனைவி உயிர் நீத்தலை அறிந்திருக் கிறோம். ஆனால் இங்கு குறிக்கப்படுகின்ற கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கர் என்பவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண் ஒருத்தி பள்ளிகொண்டது புதுமையான செய்தி யாகும்.

மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டில் கூத்தாடும் பிரிதிகங்கருடன் ஆடும் தொழிலில் வல்ல ஆழ்வார் ஒருவரும் இறந்துபட்டது (பள்ளி கொண்டது) குறிக்கப்படுகிறது. கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கருடன் பாடும் பெண்ணும், ஆடலில் சிறந்த ஆழ்வாரும்

பள்ளி கொண்ட நிகழ்ச்சியினை அறியும்போது நமக்கு உணர்ச்சி மேலோங்குகிறது. கூத்தாடுதல், பாடுதல் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள கலைகளாகையால் அவர்களுக்குள் ஏற்பட்ட அன்பின் பெருக்காலேயே அவருடன் பள்ளி கொண்டிருத்தல் கூடும். இறந்துபட்ட ஆழ்வார் குடும்பத்தாருக்கு ஒரு வேலி நிலம் அளிக்கப்பட்டது. இந்நிலம் பதினாறு சாண் கோலால் அளந்துவிடப் பட்டதென்பதை நோக்கும் பொழுது மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் கொடையாக நிலத்தை அளக்கும் பொது அளவு கோலாக பதினாறு சாண்கோல் வழக்கிலிருந்திருக்கிறது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

முதலாம் இராசராசன் தன்னுடைய ஆட்சிப் பகுதியினை முறையாக அளந்து வகைப்படுத்தினான். அதுபோல அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரை பொது நில அளவை முறை வழக்கில் இருந்திருக்கிறது. நில வரி பணமாகவும் பொருளாகவும் வசூலிக்கப் பட்டுள்ளது. விளை நிலங்கள் நீர் நிலம், கார்நிலம் புன்செய் நிலம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு விளைச்சலுக்கு ஏற்ப வரி வசூலிக்கப்பட்டுள்ளது என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No....
Date....
MADRAS-28.

# திருப்புட்குழி

சென்னையில் இருந்து வேலூர் செல்லும் நெடுஞ்சாலையில் 'பாலு செட்டிச் சத்திரம்' என்ற ஊர் உள்ளது. இங்கிருந்து தென் திசையில் செல்லும் பாதை வழியாக நடந்து சென்றால் 'திருப்புட்குழி' என்ற ஊரை அடையலாம். இங்கு மிகவும் உயர்ந்து நிற்கும் கோயிலும் திருச்சுற்று மதிலும் செல்லுகின்றவர்களை வருக வருக என்று வரவேற்பது போல் உள்ளன.

தமர் நாட்டு, தமர் கோட்டத்து 'சித்திரமேழித் திருப்புட்குழி' என்று இவ்வூரைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கல்வெட்டுகள் இங்கு எடுக்கப்பட்டுள்ள கோயிலைப் பேரேற்றுப் பெருமாள் கோயில், எம்பெருமானார் விஜய ராகவப் பெருமாள் கோயில், சித்திரமேழித் திருப்புட்குழி நாயனார் கோயில் என்று பல பெயர்களில் குறிக்கின்றன. இங்கு எழுந்தருளி உள்ள இறைவன் 'திருப்புட்குழி நாயனார் விசையராகவப் பெருமாள்' என்று அழைக்கப்படுகிறார். திருமங்கையாழ்வார் 'புட்குழிப்பேரேறு' என்று இப்பெருமானைப் போற்றிப் பாடுகிறார். இறைவியின் பெயர் 'மரகதவல்லித் தாயார்' என்பதாகும்.

தொண்டை நாட்டில் தலைசிறந்து விளங்குவது காஞ்சியம் பகுதியாகும். இப்பகுதியில் உள்ள பதினெட்டு திருப்பதிகளுள் கடைசித் திருப்பதியாக விளங்குவது திருப்புட்குழியாகும். இத்திருத்தலம் 'திருமங்கை ஆழ்வாரால்' மங்களா சாஸனம் செய்யப் பெற்றதாகும்.

அலங்கெழு தடக்கையாயன் வாயாம்பற்கு
அழியுமா லென்னுள்ள மென்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழிபாடும்
போதுமோ நீர்மலைக் கென்னும்
குலங்கெழு கொல்லி கோமளவல்லி
கொடியிடை நெடு மழைக்கண்ணி

என்று பெரியதிருமொழியில் திருமங்கை ஆழ்வார் பாடுகின்றார்

திருப்புட்குழியின் புராண வரலாற்றை நோக்குவோ மாயின் இராமபிரான் வனவாசத்தில் சீதையைப் பிரிந்து தேடிச் செல்லும்போது, இராவணனிடம் சீதையை மீட்கப் போரிட்டுச் சிறகொடிந்து மரணத்தருவாயில் உள்ள ஜடாயுவைச் சந்தித்தார். ஜடாயு தமக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களை இராமபிரானையே செய்யுமாறும், தமக்கு ஸ்ரீதேவி, பூதேவியுடன் பரமபதக் காட்சி அருளுமாறும் வேண்டினார். இராமனும் அவ்வாறே காட்சி தந்து தமது வலது திருவடியைத் தொங்கவிட்டுக் கொண்டு ஈமக்காரியங் களைச் செய்து அருளினார். அப்போது வலது பக்கம் தகனம் செய்யவே, ஸ்ரீதேவியால் சுவாலையைப் பொறுக்க முடியாமல் சற்று விலகி இடது பக்கம் வந்து தலையை சாய்த்துக் கொண்டு இருக்கிறார். பூதேவி வலது பக்கம் வந்து ஜடாயு வின் தகன சுவாலையைப் பொறுத்துக் கொண்டு சேவை தரு கிறார். இந்த காட்சியை இன்னும் இக்கோயிலின் உண்ணாழியில் காணலாம். ஸ்ரீதேவி வலப்பக்கமும், பூதேவி இடப்பக்கமும் இருக்கும் முறை இக்கோயிலில் இதனால் மாறி உள்ளது. ஜடாயுக்கு நீர்க்கடன் செய்ய வருண மந்திரம் கூறித் தன் வில்லின் நுனியால் இராமபிரான் உண்டாக்கிய திருக்குளமே 'ஜடாயு தீர்த்தம் என்பது. இதுவே 'ஜடாயு புஷ்கரணி' என்று அழைக்கப்படுகிறது. இத்தலமும் ஜடாயுவின் பெயரால் (புள்-பறவையான ஜடாயு) திருப்புட்குழி என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு இதுவே பெயராக அமைந்து உள்ளது சிறப்புடையதாகும்.

இங்கு எழுந்தருளி உள்ள 'மரகதவல்லித் தாயார்' மிகவும் மகிமை வாய்ந்தவர் என்று மக்கள் போற்றி வணங்கு கின்றனர். புத்திர சந்தான பாக்கியம் இல்லாத பெண்கள் 'ஜடாயு புஷ்கரணியில்நீராடி தேவஸ்தானத்தின்' திருமடைப் பள்ளியில் வறுத்துக் கொடுக்கும் பச்சை பயிறைத் தாயார் சந்நிதி யில் மடியில் கட்டிக் கொண்டு ஒரு நாள் தங்கி, பக்தி சிரத்தை யுடன் உபவாசம் இருக்க வேண்டும். மறுநாள் அவிழ்த்துப் பார்க்கும்போது பயறு முளைத்திருந்தால் புத்திரபாக்கியம் கிடைக்கும் என்பது நடைமுறை, இதனாலேயே தாயார் வறுத்த பயறு முளைக்க வைக்கும் மரகதவல்லி தயார் என்று அழைக்கப்படுகிறார்.

இது ஒரு சிறந்த பிரார்த்தனை தலம். அமாவாசை தோறும் இங்குள்ள ஜடாயு புஷ்கரணியில் நீராடி எம்பெரு

மானையும் தாயாரையும் வழிபட்டால் சகல பாவங்களும் நிவர்த்தியாகி சகல செல்வங்களும் பெருகி வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.

திருப்புட்குழி பல்வகைச் சிறப்புக்களையுடைய ஊராகும். இங்கு மகான்கள் பலர் வாழ்ந்துள்ளனர். விசிஷ்டாத் வைதத்தைத் தோற்றுவித்த ஸ்ரீவைஷ்ணவப் பெரியோராகிய இராமாநுஜர், இவ்வூரில் வாழ்ந்த யாதவப் பிரகாசரிடம் வேதாந்தத்தைக் கற்றுத் தெளிந்தார். எம்பாரும் (கோவிந்த பட்டர்) இவ்வூரில் தங்கியிருந்து சிறு வயதில யாதவ பிரகாச ரிடம் வேதாந்த நூல்களைக் கற்றார்.

குருபரம்பரா ப்ரபாவத்தை அளித்தவரும் ஸ்ரீ நம்பிள்ளை யின் சீடராக இருந்து கொண்டு வாழ்நாளெல்லாம் அவருக்கு அடிமை செய்து போந்தவருமான பின்பழகராம் பெருமாள் ஜீயர் அவதரித்த இடமும் இவ்வூரே. அஷ்டதிக் கஜாசாரியர் களான கோயிலண்ணன், எறும்பியப்பா, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியர் ஆகியோரும் இங்கு எழுந்தருளி ஸ்ரீவிஜயராகவனை மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள். இராமாநுஜர் திருமலைக்கு எழுந்தருளிய போதும் அங்கிருந்து கோவிந்த பட்டரைத் (எம்பாரைத்) திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்றபோதும். இவ்வூருக்கு எழுந்தருளி தங்கி இருக்கிறார் என்பது சிறப்புடையதாகும்.

விஜயராகவப் பெருமாள் திருக்கோயிலின் முன் ஓங்கி நிற்கும் கொடிக் கம்பத்தைக் காணலாம். இது அத்திமரத்தில் செய்யப்பட்டதாகும். இதன் தென்பக்கத்தில்'ஜடாயு புஷ்கரணி' உள்ளது. கோயில் நுழைவாயிலின் மேல் கட்டப்பெற்றுள்ள கோபுரம் அண்மை காலத்தில் கட்டப்பெற்றதாகும். அடிப் பகுதி கருங்கல்லால் கட்டப்பெற்றுள்ளது. நுழைவாயிலின் இரண்டு பக்கங்களிலும் திண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. தென்பக்கத்தில் உள்ள திண்ணையில் உள்ள முதல் தூணின் அடிப்பகுதியில் இராமாநுஜர் (உடையவர்) உருவம் செதுக்கப் பெற்றுள்ளது. இவர் நின்ற நிலையில் 'தண்டத்தை' இடது தோளில் அணைத்த வண்ணம் இரண்டு கைகளையும் வணங்கும் நிலையில் காட்டப்பெற்றுள்ளது. நுழைவாயிலைக் கடந்து உள்ளே வந்தவுடன் ஒரு பெரிய மண்டபத்தைக் காணலாம் இதற்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன்

வாயிலாக மேலே சென்றவுடன் மண்டபத்தின் முன் உள்ள 'விஜயராகவப் பெருமாள்' சன்னதியை அடையலாம்.

உண்ணாழியில் விஜயராகவப் பெருமாள் அமர்ந்த நிலையில் அருகில் ஸ்ரீதேவி, பூதேவியிடன் ஜடாயுவிற்காக காட்சி கொடுத்த கோலம் கருங்கல்லில் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளது இதற்கு முன்னர் வைக்கப் பெற்றுள்ள விஜய ராகவப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி, போறகத்திப் பெருமாள், ஆண்டாள் ஆகிய உற்சவ மூர்த்திகள் செப்புத் திருமேனிகளாக காட்சியளிக்கின்றனர். இத்திருமேனிகள் கி. பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

போறகத்திப் பொருமாள் செப்புத் திருமேனி மிகவும் அழகாக வடிக்கப் பெற்றுள்ளது சதுரபீடத்தின் மீது உள்ள பத்ம பீடத்தில் நின்ற நிலையில் இடது முன் கையை கதையின் மீது ஊன்றியும், இடது பின்கையில் சங்கும், வலது முன் கை அபய முத்திரையுப், வலது பின்கையில் சக்கரத்தையும் ஏந்திய நிலை. மார்பில் புரிநூல் மூன்று பிரிவாகப் பிரிந்து செல்கிறது. வலது பக்க மார்பில் 'திருமரு' கழுத்தில் அணி. காதுகளில் மகர குண்டலங்கள், கிரீட மகுடம், தலையின் பின் பக்கம் சிரச்சக்கரம் காட்டப் பெற்றுள்ளது. பாதங்களில் பாதச்சங்கிலி, கணுக்காலில் இருந்து இடுப்புவரை ஆடை. ஆடையின் மீது 'கீர்த்திமுகக் கச்சு'.

உண்ணாழியின் மீது அமைந்துள்ள விமானம் 'நாகர விமானமாகும்' நான்கு பட்டைகளை உடையது இதன் மீது கலசம் அமைந்துள்ளது.

கோயிலை வலம் வருகின்ற வழியாகச் சென்றால் திருச்சுற்றின் தென் மேற்கு மூலையில் ஆண்டாள் சன்னதி உள்ளது இதன் அருகில் தென்பக்கத்தில் உள்ள மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில், தென்பக்கத் திருச்சுற்று சுவற்றில் யாதவப்பிரகாசரும், இராமாநுஜரும் (உடையவர்) சிற்பமாக வடிக்கப் பெற்றுள்ளனர். யாதவப்பிரகாசர் என்பவர் திருப்புட் குழியில் வாழ்ந்த சைவசித்தாந்தியாவார். இவரிடத்தில் உடையவர் பெரிதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். உடையவர் தன்னுடைய ஊரான திருப்பெரும்புதூரில் இருந்து

திருப்புட்குழி வந்து அவரிடம் சீடராக இருந்திருக்கிறார். அமர்ந்திருக்கும் யாதவ பிரகாசரை, உடையார் நின்று வணங்கும் நிலையில் சிற்பம் வடிக்கப்பெற்றுள்ளது.

ஆண்டாள் சன்னதிக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள வாகன மண்டபத்தில் சிம்ம வாகனம், யானை வாகனம், கருட வாகனம், சர்ப்ப வாகனம், கிளி வாகனம், ஆஞ்சநேயர் வாகனம் ஆகியவை உள்ளன. இவற்றுள் சிம்ம வாகனம் மிகவும் அழகாக உள்ளது. வாகனங்கள் பிற்காலத்தில் செய்யப் பெற்றதாக இருந்தாலும் அழகு வாய்ந்தவை.

இதனை அடுத்து வடக்குப் பக்கத் திருச்சுற்றில் மரகத வல்லித் தாயார் சன்னதி உள்ளது. கிழக்குப் பார்த்து உள்ள இந்த சன்னதியின் முன் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தை கடந்து உள்ளே சென்றால் மரகதவல்லித் தாயார் அமர்ந்துள்ள திருக்கோலத்தைக் காணலாம். அம்மையின் சிறப்பினைப் பெரிய திருமடல்

''மாமலர்மேல்
அன்னம் துயிலுமணி நீர் வயலாவி,
என்னுடைய வின்னமுதை யெவ்வுள் பெருமலையை,
சன்னிமதில் சூழ் கணமங்கைக் கற்பகத்தை,
மின்னையிரு சுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்
பொன்னை, மரகதத்தைப் புட்குழியெம் பேரேற்றை
மன்னுமரங்கத்தெம் மாமணியை''

என்று குறிக்கிறது. அம்மன் சன்னதி மண்டபத்தின் தென் கிழக்கு மூலையில் (வெளிப்பக்கம்) தென்பக்க அடிப்பகுதியில், மண்டபம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பெற்ற அளவுகோல் ''கண்டரகண்டன்கோல்'' என்று குறிக்கப்படுகிறது.

விஜயராகவப் பெருமாள் கோயிலின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு இங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பெரிதும் உதவி புரிகின்றன. கால அடிப்படையில் பார்க்கும் பொழுது 'சடையவர்மன் சுந்தரபாண்டியன்

கல்வெட்டே காலத்தால் முந்தியதாகும். இவன் மீது பாடப் பட்ட ஒரு வாழ்த்துப்பா கல்வெட்டாக இங்கே பொறிக்கப் பட்டுள்ளது.

"வாழ்க கோயில் பொன் வேய்ந்த மகிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையும் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னன் தென்னனே"

சுந்தரபாண்டியன் சில ஆழ்வார் சிலைகளை இக் கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கிறான். இவர்களுக்குத் திருவாராதனை குறைவற நடைபெறுவதற்காக ஒரு கிராமத் தையும் அளித்திருக்கிறான்.

இதனை அடுத்து தெலுங்குச் சோழர்களின் கல்வெட்டுகளே மிகுதியாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் விஜய கண்ட கோபாலதேவர், வீரகண்ட கோபாலதேவர் கல்வெட்டுகள் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

விஜயநகர ஆட்சியில் பெருமாள், இளைய பெருமாள், நாச்சியார், திருமங்கையாழ்வார், சேனை முதலியார், நித்ய விநோதச் செல்வர், வாழவந்த பெருமாள் ஆகியோரின் செப்புத் திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன என்று மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

# 3

# கரவந்தபுரம்

தமிழகத்தின் தென்கோடியில், தென்பாண்டி நாட்டில், திருநெல்வேலியிலிருந்து இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில், மானூர் அழகிய பாண்டியபுரம் செல்லும் வழியில் 'உக்கிரன்கோட்டை' என்று வழங்கும் சிற்றூர் ஒன்று உள்ளது. இவ்வூர் பாண்டியர்கள் காலத்தில் 'கரவந்தபுரம்' என்ற பெயரில் மிகவும் சிறப்புடன் திகழ்ந்திருக்கிறது. இவ்வூரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குக் கல்வெட்டு, இலக்கிய, வரலாற்றுக் குறிப்புகள் பெரிதும் துணைபுரிகின்றன.

இவ்வூருக்குப் பல பெயர்கள் வழங்கி வந்தமை கல்வெட்டு, செப்பேடுகளின் மூலம் நமக்குத் தெரியவருகிறது. அவை களக்குடி, உக்கிரன்கோட்டை, கரவந்தபுரம், தென் களந்தை, கரகிரி ஆகிய பெயர்களாகும். பக்தி இலக்கியமான தேவாரம், 'தென்களக்குடி' என்று குறிக்கிறது. பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணவர்மன் காலத்தில் இது ஒரு நாட்டுப் பிரிவுக்குத் தலைமை இடமாக விளங்கியது என்பதைக் களக்குடி நாட்டுப் பிரமதேயமான, மானநிலை நல்லூர் என்று வரும் கல்வெட்டுத் தொடரால் தெரிந்து கொள்ளலாம்.

முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் இவ்வூர் சிறந்த இடத்தை வகித்து வந்தது என்பதைப் பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளிலிருந்தும் நன்கு தெரிந்து கொள்ளலாம். பெரும் பாலான பாண்டிய மன்னர்கள் கரவந்தபுரக் கோட்டையை வென்றதைத் தங்கள் வெற்றிகளிலே மிகவும் சிறந்ததொரு வெற்றியாகக் கருதியதாகத் தெரியவருகிறது. அம்மன்னர்கள் காலத்தில், களக்குடியில் பெரும் கோட்டையை அமைத்துக் கொண்டு மன்னன் ஒருவன் ஆட்சி புரிந்தான் என்பது இதன் மூலம் புலனாகிறது. அவ்வாறு ஆட்சி புரிந்தவன், ஒரு ஊரின் தலைவனாக இருந்திருக்க வேண்டுமென்று திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். "அங்கிருந்த தலைவன் ஒருவன் உக்கிரன் என்ற பெயருடைய வனாயிருத்தல் வேண்டும். இத்தலைவனும் பராந்தக

பாண்டியன் ஆட்சிக் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். இத்தலைவன் இவ்வரசனோடு முரண்பட்டுச் சில தகாதச் செயல்கள் செய்திருக்கக் கூடும். இதன் காரணமாக இப்பாண்டியன் இவ்வுக்கிரனோடு போர் புரிந்து அவனையும், அவன் களிற்றினங்களையும் கைப்பற்றிக் கொணர்ந்திருத்தல் வேண்டும். கரவந்தபுரம் என்று கல்வெட்டுகளில் அழைக்கப் பட்ட ஊரின் பழைய பெயர் மறைந்து அவ்வூர் அத்தலைவன் பெயரால் பிற்காலத்தில் வழங்கப்பெற்று வருதலை நோக்கு மிடத்து, தோல்வியுற்றுப் பாண்டியனால் சிறைப்பிடிக்கப்பட்ட உக்கிரன் என்ற தலைவன் பாண்டியனைப் பணிந்து மீண்டும் அக்கோட்டையை பெற்றிருத்தல் வேண்டும்."

உக்கிரன் என்பவன் பாண்டிய அரசர்களுள் ஒருவனாக இருக்கக் கூடும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இக்கருத்து ஒருவகையில் பொருத்தமுடையதாக இருக்கிறது. பாண்டிய மன்னனான இரண்டாம் வரகுணன் (862-885) பாண்டிய நாட்டில் தன் ஆட்சியை நிலை நிறுத்துவதற்குத் தடையாக இருந்த இலங்கை மன்னனோடு போரிட்டான் என்று திண்டுக் கல்லுக்கு அருகிலுள்ள பெரும்பள்ளி என்னும் ஊரில் கிடைத்த கல்வெட்டு குறிப்பிடுகிறது. இலங்கை அரசனோடு வரகுணன் சண்டையிட்டதற்குக் காரணம் யாது என்று ஆராயும்போது, உக்கிரகிரியில் தோன்றிய உக்கிர பாண்டியன், பாண்டிய அரசைக் கைப்பற்ற நினைத்து இலங்கை அரசரின் துணை கொண்டு வரகுணனோடு போரிட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அதன் காரணமாகவே வரகுணன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

கரவந்தபுரம் பாண்டிய மன்னர்களுக்கு ஒரு முக்கியப் பகை இடமாக இருந்தபோதிலும், அது அம்மன்னர்களுக்குச் சிறந்த தளபதிகளையும், முதன் மந்திரிகளையும் அளித்து உதவி புரிந்திருக்கிறது என்பதைக் கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். அவர்களுள் மிகவும் முக்கியமானவர்கள் மாறன்காரி, சாத்தன் கணபதி, மாறன் எயினன், மூர்த்தி எயினன் ஆவார்கள். ஒவ்வொருவரும், எங்கு, எந்தெந்த மன்னர்கள் காலத்து என்னென்ன செயல் புரிந்து உதவியுள்ளார்கள் என்பதைக் கீழே காண்போம்.

## மாறன்காரி

இவன் மாறன் என்பவனின் மகன். காரி என்ற இயற் பெயருடையவன். வைத்திய குலத்தைச் சார்ந்தவன். வைத்திய குலத்தின் சிறப்பினை "வாத்திய கேய சங்கீதங்களால் மள வெய்திய வங்களந்தை வைத்திய குலம்" என்று குறிக்கிறது, சடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனுடைய சென்னை அருங்காட்சியகச் செப்பேடு. மதுரகவி என்னுஞ் சிறப்புப் பெயருடையவன். நெடுஞ்சடையன் பராந்தகன் ஆட்சியின் முற்பகுதியில் முதல் அமைச்சனாக விளங்கியவன் (உத்தம மந்திரி) இவன் மதுரைக்கு வடகிழக்கே ஆறுமைல் தூரத்தி லுள்ள ஆனைமலையில் திருமாலுக்கு ஒரு கற்றளி அமைத்து அதில் நரசிங்கப்பெருமாளை (கி.பி. 770-ஆம் ஆண்டில்) எழுந்தருளுவித்து நீர்த்தெளி செய்தான். அக்கோயிலுக்கு அண்மையில் அந்தணர்களுக்கு ஓர் அக்கிரகாரம் அமைத் துள்ளான். இவனுடைய செயல்களை நோக்குமிடத்து இவன் வைணவ சமயப்பற்று மிக்கவன் என்று தெரிகிறது. இவன் பாண்டிய அரசனால் வழங்கப்பெற்ற "மூவேந்த மங்கலப் பேரரையன்"[8] என்ற பட்டம் பெற்றவன். வேள்விக்குடிச் செப்பேடுகளில் இவனே 'ஆணத்தியாகக்' கூறப் பெற்றுள்ளான். அச்செப்பேடு இவனை "வைத்திய சிகாமணி மாறன் காரி" என்று குறிப்பிட்டுள்ளது. இவனும், ஆனைமலைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மாறன்காரியும் ஒருவனாகவே இருக்க வேண்டும். மாறன்காரி இறந்தவுடன், இவனுடைய இளவல் மாறன் எயினன் என்கின்ற பாண்டிமங்கல விசையரையன் அமைச்சனாகப் பதவி ஏற்றான் என்று ஆனைமலைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தன்னுடைய முன்னோர்களைப் போல இவனும் கோயில் திருப்பணி செய்துள்ளான். மாறன்காரி எடுப்பித்த கற்றளிக்கு முகமண்டபம் கட்டுவித்துள்ளான். வேள்விக்குடிச் செப்பேடு மாறன் காரி வெண்பைப் போரில் ஈடுபட்டதைக் குறிக்கிறது. இதிலிருந்து இவன் அமைச்சனாக மட்டுமில்லாமல் போரை முன்னின்று நடாத்தும் தளபதியாகவும் திகழ்ந்திருக்கின்றான் என்று தெரிகிறது. இனிமையான பேச்சாற்றலும், புலமையும், அறிவியலில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தான் என்று கல்வெட்டுக் குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

சடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனின், பதினேழாம் ஆட்சியாண்டு கல்வெட்டு, 'மகாசாமந்த மூர்த்தி எயினன்'

என்பவனைப் பற்றிக் குறிக்கிறது. இவனும் வைத்திய குடும்பத்தைச் சார்ந்தவன். மாறன்காரியின் சம காலத்தவன். 'வீரமங்கலப் பேரரையன்' என்ற பட்டப் பெயரை உடையவன்.

### சாத்தன் கணபதி

இவன் சாத்தன் என்பவனுடைய மகன். வைத்திய குலத்தினன். 'கணபதி' என்னும் இயற்பெயருடையவன். பராந்தக பாண்டியனது ஆட்சியின் முற்பகுதியில் எல்லாப் படைகட்கும் 'மாசாமந்தனாக' விளங்கியவன். இவ்வரசனால் வழங்கப்பெற்ற 'பாண்டி அமர்த மங்கலவரையன்' என்னும் பட்டப் பெயருடையவன். இவன் திருப்பரங்குன்றத்தில் உள்ள கோயிலுக்குத் திருப்பணி செய்து அங்குள்ள திருக்குளத்தையும் திருத்தி, அறச் செயல்களையும் ஒழுங்குபடுத்தினான் என்று அவ்வூரில் உள்ள பராந்தகனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவனைப் போலவே இவனுடைய இல்லக்கிழத்தி நக்கன் கொற்றி என்பவளும் அறச்செயல்கள் செய்து இருக்கின்றாள். இவள் இதே ஊரில் துர்கைக்கும், சேட்டைக்கும் வெவ்வேறு கோயில் அமைத்தனள் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவர்களைத் தவிர அறச் செயல்களில் ஆர்வமுடைய சிலரையும் இக்களக்குடி ஈன்றெடுத்து இருக்கிறது.

களக்குடி ஒரு நாட்டின் தலைநகரமாக இருந்தது என்பதை முன்னரே கண்டோம். இக்களக்குடி நாட்டில் அமைந்திருந்த சில ஊர்களைச் சில கல்வெட்டுகள் தெரியப் படுத்துகின்றன.

திருநெல்வேலி மாவட்டம், மானூரில் உள்ள மாறன் சடையனின், முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு களக்குடி நாட்டில் உள்ள பிரமதேயமான மானநிலை நல்லூரைக் குறிப்பிடுகிறது. அதே ஊரில் உள்ள மற்றொரு கல்வெட்டு, களக்குடி நாட்டு கருவநல்லூர் என்ற விக்கிரம பாண்டிய நல்லூரைக் குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டு களக்குடி நாட்டில் உள்ள மேற்றுணி சதுர்வேதி மங்கலம் என்ற ஊரைக் குறிக்கிறது. ஆகவே இந்நாட்டில் கரவந்தபுரம், மானநிலை நல்லூர், மேற்றுணிசதுர்வேதி மங்கலம் ஆகிய ஊர்கள் அமைந்திருந்தன என்பதைக் கல்வெட்டுகள் மூலம் நாம் அறிகிறோம்.

# 4

# ஸ்ரீ வீரபாண்டிய தேவர் கல்வெட்டு ஓர் ஆய்வு

தஞ்சை மாவட்டம், திருவையாறு - கும்பகோணம் நெடுஞ்சாலையில் வடகுரங்காடுதுறை என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரில் எடுக்கப்பட்டுள்ள தயாநிதீஸ்வரர் கோயில் நுழைவாயிலின் தென்பக்க நிலையில் கோச்சடையபன்மர் திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவருடைய 10-ஆவது (கி.பி. 1263) ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

"விக்கிரம சோழ வளநாட்டு விறைக்கூற்றத்து திருக்குரங்காடுதுறை" என்று இவ்வூரின் பெயரை இக்கோயில் கல்வெட்டு குறிக்கிறது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் 'உடைய நாயனார்' என்று குறிக்கப்படுகிறார். திருக்குரங்காடுதுறையுடைய நாயனார் கோயிலில் 'திருநடைமாளிகைத்' திருப்பணிக்கு எழுபத்தொன்பது வளநாட்டுப் பதினென் பூமிச் சித்திரமேழிப் பெரிய நாட்டாரும், பதினெண் விஷையத்தாரும் கூடிப் பொறுப்பாயிருந்து திருப்பணியினை முடிப்பதற்கு நிச்சயித்து, வேளாண் பெருங்குடி மக்களிடத்திலிருந்தும் வணிகப் பெருங்குடி மக்களிடத்திலிருந்தும் வசூலித்த வரிகளை இக்கல்வெட்டு குறிக்கிறது.

**வேளாண் பெருங்குடி மக்களிடத்திலிருந்து பெற்ற வரி அளவு**

| | |
|---|---|
| போகம் ஒன்றுக்கு ஏர் ஒன்றுக்கு | ஒரு தூணி நெல் (4 மரக்கால் (அ) 8 படி) |
| ஆள் ஒன்றுக்கு | ஒரு பதக்கு நெல் (2 மரக்கால் (அ) 4 படி |
| கைவினை ஆள் ஒன்றுக்கு (ஏவலாளி) | ஒரு குறுணி நெல் (ஒரு மரக்கால் (அ) 2 படி |

வணிகப் பெருங்குடி மக்களிடத்திலிருந்து பெற்ற வரி அளவு

| | | |
|---|---|---|
| மடிப்பன | - புடவைக்கட்டு ஒன்றுக்கு | - அரைப்பணம் |
| நிறுப்பன | - நிறை ஒன்றுக்கு | - ஒரு காசு |
| அளப்பன | - மிளகுப்பொதி ஒன்றுக்கு | - கால் பணம் |
| | பாக்குப்பொதி ஒன்றுக்கு | - கால் பணம் |
| உரைப்பன | - பொன் ஒன்றுக்கு | - கால் பணம் |
| எடுப்பன (தூக்கிச்செல்வன) | - அரிசிப்பொதி ஒன்றுக்கு | - இரண்டு காசு |
| | நெல்பொதி ஒன்றுக்கு | - ஒரு காசு |
| | தலைச்சுமை ஒன்றுக்கு | - ஒரு காசு |

மேற்குறித்த வகையில் வரி வசூல் செய்து கொண்டும் இவை தவிர வெளியூரிலிருந்து, இவ்வூருக்கு வருகின்ற பொருள்களின் மீது வரி வசூலிக்கப் பெற்றும் திருப்பணி முடித்துக் கொள்ளக் கொடையளிக்கப் பெறுவதாகக் கல்வெட்டு குறிக்கிறது.

இந்த முடிவினை நாட்டார், நகரத்தார் (வெள்ளான் வகை, வணிக சபை உறுப்பினர்கள்) பதினெண் விஷயத்தார் (வணிகக் குழுவினர்) ஆகிய முப்பிரிவினரும் ஏற்றுக் கொண்டனர். அதனை இக்கோயிலில் கல்லில் வெட்டுமாறு பணித்தற்கு ஏற்ப,

1. எழுபத்தொன்பது நாட்டாரின், நாட்டுக் கணக்கு
2. நகரத்தாருக்குரிய நகரக்கணக்காகிய ஐந்நூற்று வேளாண்
3. மலை மண்டல மாதாக்கள் (கேரள நாட்டுப் பகுதியில் இருந்து வந்தவர்கள்)
4. கண்ணனூரில் உள்ள (திருச்சி மாவட்டம்) வீரபாண்டியன் சுங்கச்சாவடி மடிகையில் உள்ள பதினெண் விஷயத்தார் (வணிகக் குழுவினர்).
5. குற்றாலமான (மயிலாடுதுறை-குத்தாலம்) வீரபாண்டியன் பட்டினத்தைச் சேர்ந்த பதினெண் விஷையத்தார் ஆகியோர் கையொப்பமிட்டனர் என்பதைக் கல்வெட்டு குறிக்கிறது.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. MADRAS-28. LIBRARY. Acc No.... Date....

## கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கொச்சடையபன்மர்
திருபுவனச்சக்கரவர்த்திகள்
ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு
பத்தாவது விக்கிரம சோழ வளநாட்டு
விறைக் கூற்றத்து திருக்குரங்காடுதுறை
உடைய நாயனார் கோயில்
திருநடைமாளிகை திருப்பணிக்கு
எழுபத்தொன்பது வளநாட்டு
பதினெண் பூமிச் சித்திரமேழிப்
பெரிய நாட்டாரும், பதினெண் விஷையத்தாரும்
ரக்ஷை ஆக நிறைவற நிறைந்து
நிச்ச யித்தபடி
போகம் ஒன்றுக்கு ஏர் ஒன்றுக்குத்
தூணி நெல்லும் ஆள் ஒன்றுக்கு
பதக்கும் கைவ்வினை ஆளுக்கு
குறுணி நெல்லுந் தண்டி கொள்ளவும்
அளப்பன, நிறுப்பன, மடிப்பன
உரைப்பன, எடுப்பன இவையைந்துக்கு
புடவைக்கட்டு ஒன்றுக்கு பணம்
அரையும், மிளகு பொதி ஒன்றுக்கு
பணம் காலும் பாக்குப்பொதி ஒன்றுக்கு
பணம் காலும் உரைப்பன பொன்
ஒன்றுக்கு பணம் காலும், நிறைக்கு
ஒரு காசு, அரிசிப் பொதி ஒன்றுக்கு
காசு இரண்டும், நெல்பொதி ஒன்றுக்கு
ஒரு காசும், தலைச்சுமை காசு ஒன்றும்
இவையற இவ்வருவனவும் வாங்கிக்
கொண்டு இத்திருப்பணி முடிப்பதாக

நாடும், நகரமும், பதினெண் விஷையத்
தோமும் கூடிச் சம்மதித்து
இறையனார்த் திருவாசலிலே
கல்வெட்டிக் குடுத்தமைக்கு பணியால்
நாட்டுக் கணக்கு எழுபத்தொன்பது
நாட்டு வேளான் எழுத்து, பணியால்
நகரக் கணக்கு ஐநூற்று வேளான் எழுத்து
மலை மண்டல மாதாக்கள் எழுத்து,
கண்ணனூர் வீரபாண்டியன் மடிகையில்
பதினெண் விஷையத்தார் எழுத்து,
குற்றாலமான வீரபாண்டியன் பட்டினத்து
பதினெண் விஷையத்தார் எழுத்து.

# 5

# பண்டாரம் (கருவூலம்)

## பண்டாரம்

'பண்டாரம்'[1] என்ற சொல்லுக்குப் 'பண்டகசாலை' என்று பொருள். இங்குப் பல்வகைப் பண்டங்கள் சேமித்து வைக்கப் பெற்றன. இப்பண்டக சாலையினைப் பாதுகாத்து வந்தவனுக்குப் 'பண்டாரின்' என்று பெயர் (பண்டகசாலை காப்பான்). தமிழ் அகராதியில் பண்டாரம் என்ற சொல்லுக்குப் 'பொக்கிஷம்' என்ற பொருள் குறிக்கப்படுகிறது. பொக்கிஷம் என்பது செல்வத்தைக் குறிப்பதாகும். இதைப் பாதுகாத்து வந்தவனுக்கு 'பொக்கிஷக்காரன்' என்று பெயர் (பண்டார்). பண்டாரத்தில் பணம், பொன், நெல், நெய், மற்றும் உணவுப் பொருள்கள் சேமித்து வைக்கப்பெற்றன. ஒருவகைப் பண்டத்தின் பெயரே பண்டாரம் என்று குறிக்கப்படுகிறது. புத்தகங்களைச் சேகரித்து வைக்கப்பெற்ற இடத்தினை சரஸ்வதிப் பண்டாரம்' என்றும் புஸ்தகப் பண்டாரம் என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. தஞ்சை, திருவரங்கம், சிதம்பரம், காஞ்சி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் அமைந்திருந்த நூலகங்கள் பண்டாரம் என்று அழைக்கப்பெற்றன 'பண்டாரக் கண்காணி' என்பவன், கருவூல அதிகாரியாக விளங்கினான். 'பண்டாரி' என்ற சொல்லும் கருவூல அதிகாரியைக் குறிப்பதாகும். பண்டார அதிகாரிகளின் அலுவலகம் 'பண்டார உள்ளிருப்பு' என்று அழைக்கப் பெற்றது. இதனை நிறுவகிக்கும் அதிகாரக் குழுவிற்குப் 'பண்டார வாரியம்' என்று பெயர்.

## இலக்கியங்களில் பண்டாரம்

தமிழ் இலக்கியங்களிலும், இலக்கண நூல்களிலும் பண்டாரம் என்ற சொல் குறிக்கப்படுகிறது. சூடாமணி நிகண்டு "புனை கலனிருக்கை தானே போற்றிப் பண்டக சாலை" என்று குறிக்கிறது. அழகு செய்யப்பெற்ற கலன்களைச் சேர்த்து வைக்கப் பெற்ற இடம் பண்டகசாலை

யாகும். "பொங்கிய கோசம், தண்டம் போற்று பண்டாரம்" என்று பண்டாரத்தின் பெயர்கள் சூடாமணி நிகண்டில் குறிக்கப்படுகின்றன.

திருவாசகம், 'தன் அடியவர்க்கு மூல பண்டாரம்' வழங்குகின்றான் என்று குறிக்கின்றது.

'கண்டார்க்குத் தாக்கணங்கிக் காரிகை காண்மின்
பண்டாரங் காமன் படையுவள்கண் காண்மின்!'

என்று பரிபாடல் குறிக்கிறது. பக்தி இலக்கியமாகிய பெரிய புராணம் பண்டாரத்தைக் 'கோட்டாரம்' எனறு குறிக்கின்றது.

## கல்வெட்டுகளில் பண்டாரம்

கல்வெட்டுகளிலும் பண்டாரம் என்ற சொல் குறிக்கப் படுகின்றது. குறிப்பாகப் பல்லவர், பாண்டியர், சோழர், விஜய நகரர், நாயக்கர் காலக் கல்வெட்டுகளில் பண்டாரம் என்ற சொல் இடம் பெறுகின்றது.

## பல்லவர் காலத்தில் பண்டாரம்

பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில் பண்டாரம் பல்வகைப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அரசனுக்குரிய பண்டாரம் பல வழிகளில் அரசனுக்கு உதவியாக இருந்திருக்கிறது. பல்லவ மன்னர்கள் சாளுக்கிய அரசர்களுடனும், பிற அரசர் களுடனும் தொடர்ந்து போரிட வேண்டியிருந்ததால், அதற்கு வேண்டிய பணச் செலவினை ஏற்றது. பல்லவ மன்னர்கள் கலையினைப் பெரிதும் பேணிப் பாதுகாத்தனர். இதன் காரணமாக ஏற்பட்ட செலவுகட்கும், பிராமணர்களுக்காகக் கோயில்களில் மிகப் பெரிய அளவில் அறக்கட்டளைகளை வழங்கியதற்கும், பல்வகைக் கொடைகள் அளிப்பதற்கும் பண்டாரத்திலிருந்து அதிகமாகப் பொருள் செலவழிக்கப் பெற்றது. மேற்குறித்த செலவுகளைச் செய்வதற்கு வேண்டிய போதிய பொருள் வளத்தைப் பல்லவ அரசில் அமைந்திருந்த பண்டாரங்கள் பெற்றிருந்தன.[2]

## பண்டார அதிகாரிகள்

பல்லவ மல்லனின் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த 'மூல பண்டாரம்' (முக்கிய கருவூலம்) அத்தியக்ஷ என்பவரின்

மேற்பார்வையில் இயங்கி வந்தது. தண்டன் தோட்டம் சாசனம் 'கோஸ-அத்தியக்ஷ' என்ற அதிகாரியின் பெயரைக் குறிக்கிறது. இவன் 'ஆக்ஞாப்தி' என்று அழைக்கப் பெற்றான். இவன் புத்திக்கூர்மை வாய்ந்தவனாகவும், பெருங்குணங் களைப் பெற்றவனாகவும், செல்வம் மிகுந்தவனாகவும் விளங்கியதுடன் மட்டுமின்றி மற்றவர்களால் பெரிதும் போற்றப்பட்டான். பண்டாரத்தின் பல்வகைக் கடமைகளை மிகவும் திறம்படச் செய்து வந்தான் என்பது தெரிய வருகின்றது.[3]

இதே மன்னனின் காலத்தைச் சார்ந்த உளலூர் கல்வெட்டில், 'மாணிக்க பண்டாரம் காப்பான்' என்ற அதிகாரி யின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. 'கொடுக்காப்பிள்ளை' என்ற ஒருவகை அதிகாரியும் குறிக்கப்படுகின்றான். இவன் பல்வகைக் கொடைகளுக்குப் பொறுப்பாளனாக இருந்திருக் கிறான். மத்திய அரசின் கருவூல அதிகாரிகளாக, கொடுக்காப் பிள்ளை, மாணிக்கப் பண்டாரங்காப்பான் ஆகிய இருவரும் விளங்கினர்.

சிலாக்காரா என்ற இடத்தில் கிடைத்துள்ள சாசனம் பண்டாரத்தில் பணிசெய்வோரைப் 'பாண்டா காரிகா' என்று குறிக்கின்றது. பல்லவர் காலத்தில் பண்டாரத்தைப் பல்வகை அதிகாரிகள் பொறுப்பேற்று நடத்தி வந்திருக்கின்றனர் என்று தெரிகின்றது. பல்லவர் கால அரசுக் கருவூலம் ஸ்ரீ பண்டாரம் என்று குறிக்கப்படுகின்றது இது வருவாய்த்துறையின் ஓர் அங்கமாக விளங்கியது. இதன் அதிகாரிகள் வருவாய்த்துறை அதிகாரிகள் என்று குறிக்கப்பட்டனர்.

நந்திவர்மன் காலத்தில் கொடுக்காபிள்ளை என்ற அதிகாரிகள் காஷ்மீர நாட்டு 'கிரக கிரத்யா' என்ற அதிகாரியை ஒத்திருக்கின்றனர். அரண்மனைப் பொருளா தாரத்தைக் கவனித்து வந்த அதிகாரியின் பெயரை 'கிரஹ கிரத்யா' என்று கல்கணர் குறிப்பிடுகின்றார். இவனே பல்வகைக் கொடை நிருவாகத்தையும், கடவுள், பிராமணர்கள், அரசுப் பணியாளர்கள் ஆகியவர்களுக்குரிய அறக்கட்டளை களையும் கவனித்து வந்தான் என்பார் அவர்.

## சோழர் காலத்தில் பண்டாரம்

கோயில் நிருவாகம் 'மூல பருஷை'[4] என்ற சபையாரிடம் ஒப்படைக்கப் பெற்றது. இந்த சபைகள் கோயிற் பூசாரிகள், தேகன்மிகள், கணக்கர்கள், பிற கோயில் ஊழியர்களின் உதவியோடும், பண்டாரங்களின் உதவியோடும் கோயிலின் நிருவாமத்தைக் கவனித்தன. நிருவாக அலுவலர்களாகப் பண்டாரங்கள் கோயில் வேலைகளைக் கவனித்தனர். கோயில் கணக்கர்கள் முறையான பதிவேடுகளை வைத்திருந்தனர். இதற்குப் 'பண்டாரப் பொத்தகம்' என்று பெயர். இந்தப் புத்தகத்தில் வருமானம், மற்றும் கோயிற் பணியாளர்களுக்கு வழங்கப்பெற்ற செலவினங்களையும் பதிவு செய்தனர். பண்டாரம், கணக்கர், பிரம்மசாரிகள் ஆகிய பதவிகளுக்குத் தகுதி வாய்ந்த நபர்களைக் கிராமச் சபையினர் தேர்ந்தெடுத்தனர். சில சமயங்களில் கோயில் பூசாரிகளிடம் பணம், பொன் போன்ற பொருள்கள் ஒப்படைக்கப்பெற்றுக் கோயில் காரியங்கள் செய்யப்பெற்றன.

## கோயில் பண்டாரங்கள்

தஞ்சைப் பெரிய கோயிலில் 'உடையார் பெரும் பண்டாரம்' என்ற ஒரு பண்டாரமிருந்தது. இதில் சோழ மன்னர்கள் மாற்றரசர்களை வெற்றி கண்டு பெற்ற பல்வகைப் பொருட்களைக் கொண்டு வந்து சேர்ப்பித்ததைக் கல்வெட்டு, "யானையும், குதிரையும், ஒட்டகமும் பெண்டிர் பண்டாரமும் கைக்கொண்டு" என்று குறிக்கின்றது.[5]

இராஜராஜன் சேர மன்னர்களையும், பாண்டியர்களையும் வெற்றி கண்டு அவர்களிடமிருந்து கொண்டு வந்த பொருள்களைப் பண்டாரத்தில் செலுத்தினான் என்று கல்வெட்டு குறிக்கிறது. இந்த பண்டாரச் செல்வத்திலிருந்து பெருவுடையார்க்குச் செய்யப்பெற்ற பல்வகைச் சின்னங்களும், அணிகலன்களும் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை செய்யப்பெற்றது. பொதுமக்களால் இறைவனுடைய வழிபாட்டிற்காகக் கொடுக்கப்பட்ட பொருள்களும் 'உடையார் பண்டாரத்தில்' சேர்க்கப்பட்டன. கோயில் பண்டாரத்திலிருந்து திருவாபரணங்கள் செய்வதற்காகப் பொன்னும், நகையும் கொடுக்கப்பட்டன. மேலும் பல்வேறு வகையான திருவாபரணங்களும் செய்தளிக்கப்பட்டன.

தஞ்சைப் பெரியகோயில் பணியாளர்களாகிய பிரம்மச் சாரிகள் தங்கள் ஊதியத்தை நெல்லாகவும், காசாகவும் தத்தமக்குச் சொந்த ஊரில், அதாவது 'உள்ளூர் பண்டாரத்தே' பெற்றனர். பண்டாரங்களும், கணக்கர்களும் தங்கள் ஊதியத்தை 'மூல பண்டாரத்திலிருந்து' பெற்றனர். பஞ்ச காலங்களில் கோயில் பணியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் வேண்டிய உதவிகளைக் கோயில் அதிகாரிகள் பண்டாரத்தின் துணைக்கொண்டு செய்தனர். ஸ்ரீ பண்டாரத்தில் கடனாகப் பெற்ற காசுக்காகக் காசு ஒன்றுக்கு மூன்று குறுணி நெல் ஆடவல்லான் என்னும் மரக்காலால் பெரும் பண்டாரத்திற்கு அளிக்கப்பெற்றது.[6]

பெருமங்கலம் சபையார் தாம் பெற்ற 78 காசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு காசுக்கு வட்டியாக முக்குறுணி நெல் வீதம், பெரும் பண்டாரத்தில், ராஜகேசரிக்குச் சமமான ஆடவல்லான் எனும் மரக்காலால், பத்தொன்பதின் கலனே தூணிப்பதக்கு நெல்லினைச் செலுத்தினர்.[7]

## வட்டியாக வாழைப்பழம்

தஞ்சையில் அமைந்திருந்த திரிபுவன மாதேவிப் பேரங்காடிப் பெருமக்கள் தாம் முன்னர் பெற்ற தொகைக்காக நாள் ஒன்றுக்கு 25 வாழைப் பழங்களை வட்டியாகக் கோயில் பண்டாரத்தில் செலுத்தினர் என்று ஒரு கல்வெட்டு குறிக்கிறது.[8]

## உடையார் பண்டாரத்தில் நெய் அளத்தல்

இராஜேஸ்வரமுடையார் திருக்கோயிலில் திருவிளக் கெரிப்பதற்காக அரசனால் ஆடுகள் கொடுக்கப்பெற்றன. மக்களாலும் கொடையாக ஆடுகள் அளிக்கப்பெற்றன. அவற்றைப் பெற்றுக்கொண்ட மன்றாடிகள் திருவிளக்கு ஒன்றுக்கு ஆடவல்லானால் நிசதம் நெய் உழக்காகத் தாங்களும், தங்கள் வர்க்கத்தாரும் 'உடையார் பண்டாரத்தே' நெய் அளந்தனர் என்ற குறிப்பு காணப்படுகிறது.[9]

ஸ்ரீராஜராஜேஸ்வரமுடையார் கோயிலில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வதற்காக இராஜராஜன் நாற்பத்தெட்டுப் பிடாரர்களையும், நிலையாய் உடுக்கை வாசிப்பான்

ஒருவனையும், நிலையாய் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனையும் ஆக ஐம்பது பேரை அமர்த்தியிருந்தான். இவர்கள் நிசதம் முக்குறுணி நெல் நிவந்தமாக ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உடையார் 'உள்ளூர்ப் பண்டாரத்திலிருந்து' ஊதியமாகப் பெற்றனர்.[10]

## வீதி விடங்க தேவருக்கு விமானம்

வேங்கடன் திருநீலன் கண்டன் ஆன இருமுடி சோழ மூவேந்த வேளான் என்ற அதிகாரி கோயிற் பண்டாரத்திலிருந்த பொன் வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டு "திருவாரூர் உடையார் வீதி விடங்க தேவருக்காகப் பொன்னால் விமானம் வேய்ந்ததை ஒரு கல்வெட்டு குறிக்கிறது."

திருவெண்ணெய்நல்லூர் திருவருட்டுறை ஆழ்வார் கோயிலில் ஒரு நுந்தா விளக்கெரிப்பதற்காகச் சில பிராமணர்கள் பத்துப் பொன்னைக் கோயில் பண்டாரத்திலிருந்து பெற்றதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது.[11]

## தோட்டமும், கிணறும்

விக்கிரமசோழதேவனின் ஐந்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பட்டாலையைச் சார்ந்த ஒருவர் தோட்டத்தையும் பாசனத்திற்குரிய கிணற்றையும், 20 அச்சுப்பொன்னுக்குக் கோயில் பண்டாரத்திற்கு விற்றதைக் குறிக்கிறது.[12]

## பண்டார அதிகாரியின் கொடை

திருவல்லம் வில்வநாதேஸ்வர ஸ்வாமி கோயில் பண்டாரத்து அலுவலர் 'குறத்தி' என்ற ஊரைச் சார்ந்த வரதையர் என்பவருக்குத் திருவல்லை அந்தாதி பாடியதற்காகத் திருக்காலிவல்லம் என்ற ஊரில் 100 குழி நிலம் கொடையளித்ததைக் குறிக்கிறது ஒரு கல்வெட்டு.[13]

## தும்பை மலர் வழங்கக் கொடை

முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டு தனி நபர் ஒருவரால் திருவல்லம் திருக்காலிவல்லமுடைய மகாதேவர் கோயிலில் 12 சங்கராந்தி நாள் வழிபாட்டிற்குத் தும்பை

மலர் வழங்குவதற்காகப் பண்டாரத்தில் பொன் செலுத்தப் பெற்றதைக் குறிக்கிறது.[14]

## சந்தியா தீபம்

வீரராசேந்திர தேவனுடைய கல்வெட்டு ஒன்று திருமுருகன் பூண்டி நாயனார் கோயிலில் சந்தியாதீபம் வைப்பதற்கு ஒரு பழம்சலாகை அச்சு ஸ்ரீபண்டாரத்தில் செலுத்தப்பட்டதைக் குறிக்கிறது.[15]

திருநுந்தா விளக்கு வைப்பதற்காக 10 கழஞ்சுச் செம்பொன் தேவர் ஸ்ரீபண்டாரத்தில் செலுத்தப் பெற்றது. செலுத்தப்பெற்ற பொன் "பொன் பரகேசரி" என்ற கல்லால் நிறுக்கப்பட்டது.[16]

## பஞ்ச காலங்களில் பண்டாரத்தின் பங்கு

பஞ்சம், வறட்சி போன்ற காலங்களில் கோயிலில் அமைந்த பண்டாரங்களிலிருந்து தங்கம், ஆபரணங்கள், வெள்ளிச் சாமான்கள் முதலியவை பயிர்த் தொழில் செய்யும் மக்களுக்கு வழங்கப்பெற்றது. இதன்மூலம் விதைகளை வாங்கி பயிர்கள் விளைவிக்கப்பட்டதை ஆலங்குடிக் கல்வெட்டால் அறியமுடிகிறது.

## பாண்டிய மன்னர்கள் காலத்தில் பண்டாரம்

பாண்டிய மன்னர்கள் காலத்தில் பண்டாரங்கள் சிறந்து விளங்கியதை அக்காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனுடைய கல்வெட்டு சேர மன்னனிடமிருந்து ஒரு சிலர் கொடையாக எருமைகளையும், பசுக்களையும் பெற்றுக்கொண்டு 'ராசசிங்க தேவர் பண்டாரத்திற்கு' ஒரு குறிப்பிட்ட அளவு நெய்யினை விளக்கெரிப்பதற்காகக் கொடுத்ததை விவரிக்கிறது.[17]

ஸ்ரீவீரபாண்டியன் காலத்தில் சுந்தரபாண்டிய நல்லூர் சபையார் 'நாயனார் பண்டாரத்திற்கு' நிலம் கொடையளித்ததை ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது.

## ஸ்ரீபண்டாரிகள்

திருத்தங்கல் என்ற ஊரில் திருமலைமேல் நின்றருளிய பரமசுவாமிகளுக்கு நித்திய பூசைக்கு ஆகும் செலவை,

அத்தேவதான நிலங்களில் இருந்து வந்த வரியினைக் கொண்டு ஈடு செய்ய ஏற்பாடு செய்யப் பெற்றது. நிலங்களில் இருந்து வரியின் மூலம் கிடைத்த வருமானம் கோயில் 'ஸ்ரீ பண்டாரிகளிடமும்', 'ஸ்ரீ வைஷ்ணவர்களிடமும்' சேர்ப்பிக்கப் பெற்றது.[18]

## பண்டாரக் கண்காணி

குருவித்துறைப் பெருமாளுக்குத் திருநுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காகச் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த ஸ்ரீதேவிச்சானியும் ஸ்ரீ பூமிச்சானியும், நூறு திரமங்களை (காசுகளை) அளித்தனர். அத்திரமங்கள் நீண்ட பொன் மேனியான ஸ்ரீகருடதாஸர் கண்காணிப்பில் அப்பெருமாள் கோயில் ஸ்ரீபண்டாரத்தில் சேர்க்கப் பெற்றதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[19]

## பண்டார சூலநாழி

திருப்பத்தூர் திருத்தளி படாரருக்குப் பொழியூர் தென்னவன் பல்லவரையனாயின மாறன் ஆச்சன் திருநுந்தா விளக்கு எரிப்பதற்கு நாற்பது கழஞ்சு பொன் கொடுத்து இருக்கிறான். இதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு விளக்கு எரித்திருக்கிறார்கள். இவ்விளக்கிற்குத் திருப்பத்தூர் திருத்தளிபடாரர் பண்டாரத்து சூலநாழியால் தினமும் நெய் அளிக்கப்பெற்றது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[20]

## பண்டாரத்தான் பட்டி

ஸ்ரீவீரபாண்டியன் காலத்து கல்வெட்டு பண்டாரத்தான் பட்டி ஆவுடையார் கோயில் தானத்தாரைக் குறிக்கிறது. ஒரு ஊரின் பெயரே பண்டாரம் என்று வந்துள்ளது சிறப்புடைய தாகும்.

## விஜயநகர மன்னர்கள் காலத்தில் பண்டாரம்

விஜயநகர மன்னர்கள் காலத்தில் பண்டாரம் பல்வேறு பணிகளை மேற்கொண்டது என்பதை அவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் தெளிவாகக் கூறுகின்றன.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10149
LIBRARY, 29
Acc No. ---
Date ---
MADRAS-28.

அச்சுததேவ மகாராயர் கல்வெட்டு ஒன்று கோயில் தரும கர்த்தாக்களுக்கும், சன்னதித் தெருவிலுள்ள இராமானுஜக்கூட மடத்தினுடைய தருமகர்த்தா இராமாநுஜ ஐயருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணமாக 26000 சக்கரம் தங்கக் காசுகள் கோயில் பண்டாரத்தில் செலுத்தப்பெற்று, குறித்த திருவிழாக் களுக்காகவும், வழிபாட்டிற்கும் செலவழிக்கப் பெற்றதைக் குறிக்கிறது.[21]

## நிவாரணப் பணிகளில் பண்டாரத்தின் பங்கு

இதே மன்னனுடைய மற்றொரு கல்வெட்டு கோயில் பண்டாரத்தார்களுக்கும், இராமாநுஜ திருப்பணிப்பிள்ளை என்பவருக்கும் கோயில் நிலங்களைச் சாகுபடி செய்தவர் களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையைக் குறிக்கிறது. வறட்சி யின் காரணமாக கோயில் நிலத்தில் பயிரிடப்பெற்ற பாக்கு, தென்னை, மாமரங்கள் ஆகியவை காய்ந்து போயின. இதனால் பயிரிட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வ தற்காக மீண்டும் புதிதாக மரங்கள் பயிரிடுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.[22]

15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று, தேவதானமான பேரரசூர் என்ற கிராமத்தில் நாயன்மார் களுடைய உருவங்களைக் கோயிலின் முன் செய்து வைப்பதற் காக ஒரு குறிப்பிட்ட பணம் கோனேரி தேவ மகாராசா பண்டாரத்தில் சேர்ப்பிக்கப் பெற்றதைக் குறிக்கிறது[23]

வீரபிரதாப தேவராய மகாராயர் காலத்தில் வரிகளின் மூலம் (விபூதி காணிக்கை தவிர) கிடைத்த பணத்தை அரசனு டைய பண்டாரத்தில் செலுத்தி அந்த பணத்தைக் கொண்டு காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருவொற்றியூர், திருவாலங்காடு, திருப்பாலைவனம் ஆகிய ஊர்களில் உள்ள சிவன், விஷ்ணு கோயில்களுக்கும், சந்திரகிரி ராஜ்யத்திலுள்ள இறையிலி கிராமங்களிலுள்ள கோயில்களுக்கும், வழிபாட்டிற்கும், பழுது பார்ப்பதற்கும், திருவிழாக்களுக்கும் ஏற்பட்ட செலவுகளை ஈடுகட்ட வகை செய்யப் பெற்றது.[24]

## பண்டாரத்தார்க்குக் கிராமங்களை விற்கும் உரிமை

கிருஷ்ணதேவ மகாராயருடைய கல்வெட்டு திருவிடைக் கழி நாயனார் கோயில் பண்டார உறுப்பினர்கள் மூன்று கோயில் கிராமங்களை 20 பொன்னுக்குத் தொண்டை மண்ட லத்தைச் சார்ந்த காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்த திரு வெண்ணெய்நல்லூர் கோபால செட்டி குலத்தைச் சார்ந்த சூரிய நாராயண செட்டிக்கு விற்றதைக் குறிக்கிறது. இவன் ஆண்டுதோறும் 37 பொன்னைக் கோயில் பண்டாரத்திற்குச் செலுத்தி வந்தான் என்பது தெரிகின்றது[25]

மற்றொரு கல்வெட்டு கோயில் நிர்வாகத்தினர் தடுத்தாட் கொண்ட நல்லூர், செங்காடன் குளத்தூர் ஆகிய இரண்டு கிராமங்களைத் திருவெண்ணெய் நல்லூரைச் சார்ந்த கோபால செட்டி மகன் சூரிய நாராயண செட்டிக்கு 100 பொன்னுக்கு விற்றதைக் குறிக்கிறது. இவன் ஆண்டிற்கு 16 பொன்னை வரியாகக் கோயில் பண்டாரத்தில் செலுத்தினான்.[26]

## பண்டாரத்தார்க்கு உரிமை வழங்கும் அதிகாரம்

சதாசிவதேவமகாராயர் காலத்துக் கல்வெட்டு திருக் காளத்திஉடைய நாயனார் கோயில் பண்டாரத்துக் கண்காணிப் பாளர் காளகஸ்தி, காளகஸ்தி சீர்மை ஆகிய இடங்களில் உள்ள கோயில்களைக் கவனித்துக் கொள்வதற்காகச் சில உரிமைகளை எல்லம நாயக்கர் என்பவருடைய மகன் வேங்கடப்ப நாயக் கருக்கு அளித்ததைக் குறிக்கிறது[27].

## நாயக்கர் காலத்தில் பண்டாரம்

நாயக்க மன்னர்கள் காலத்திலும் பண்டாரங்கள் இருந் திருக்கின்றன என்பது தெரிகின்றது. கி.பி. 16ஆம் நூற் றாண்டைச் சார்ந்த கல்வெட்டு கோயிலுக்குச் சொந்தமான புத்தூர் கிராமத்தைக் குத்தகைக்கு விட்டு அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு கிடைத்த 100 பொன்னைச் சூரப்ப நாயக்க அதிகாரி பண்டாரத்தில் சேர்ப்பித்ததைக் குறிக்கிறது[28].

இவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மராட்டிய மன்னர்கள் காலத்திலும் அதற்குப் பின்னரும் கி.பி.19-ஆம் நூற்றாண்டிலும் "பண்டாரம்" என்ற சொல் வழக்கில் இருந் திருக்கின்றது.

## ஓலைச்சுவடிகளில் பண்டாரம்

பண்டாரங்கள், செயல் முறைகளை முத்திரை இட்டு அங்கீகரித்து வந்துள்ளன என்பதை 19ஆம் நூற்றாண்டு ஓலைச்சுவடிகளில் முத்திரைகள் இடப்பட்டுள்ளதைக் கொண்டு அறிய முடிகிறது. அண்மையில் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ள ஓலைச் சுவடிகளில் 8 அணா, ஒரு ரூபாய்' பொக்கிஷம்' போன்ற முத்திரைகள் உள்ளன.

## வழக்கில் பண்டாரம்

திருச்சி மாவட்டம் திருமழபாடி வைத்தியநாதசுவாமி கோயிலில் இன்றும் கோயில் ஸ்தானிகர்களில் 'பொற் பண்டாரி' 'ஸ்தான பண்டாரி' என்ற இரண்டு ஸ்தானிகர்கள் இருப்பதைக் காண முடிகின்றது. பொற்பண்டாரிகள் பொறுப்பில் நகைகள், திருவாபரணங்கள் ஆகியவை விடப்பட்டுள்ளன. ஸ்தான பண்டாரிகளிடம் இறை வனுக்குச் சூட்டப்படும் பூமாலைகள், வாகனங்கள் மற்றும் பிற பொறுப்புகள் (கருவறை, நகைப் பண்டாரம் தவிர) விடப்பட்டுள்ளன.

கோயிற் பண்டாரங்களுக்கு அளக்கப் பெற்ற நெல் கோயிலில் அமைக்கப் பெற்ற நெற்களஞ்சியங்களில் பாதுகாக்கப் பெற்றன. இன்றும் இதுபோன்ற களஞ்சியங்களை திருவரங்கம், திருவானைக்கா, திருப்பாலத்துறை ஆகிய இடங் களில் காணலாம். கோயில்களில் விளக்கெரிப்பதற்குக் கொடை யாக அளக்கப் பெற்ற நெய்யினைச் சேர்த்து வைப்பதற்கு நெய்த் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதை இன்றும் திருவரங்கம் கோயிலில் பார்க்கலாம்.

பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை 'பண்டாரம்' என்ற சொல் கோயில்களில் பல்வேறு பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்து வந்துள்ள இடமாகவே வழங்கப் பட்டுள்ளது.

## வழக்குச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பண்டாரம் | — | கருவூலம், பொக்கிஷம் |
| 2. | பண்டாரம் | — | கருவூல அதிகாரி, பொக்கிஷக்காரன் |
| 3. | பண்டாரவேலை | — | கருவூலப்பணி |
| 4. | பண்டாரி | — | கருவூல அதிகாரி |
| 5. | பண்டாரக் கண்காணி | — | கருவூல மேலதிகாரி |
| 6. | பண்டார வாரியம் | — | கருவூலப் பணிகளின் பொறுப்புக்குழு |
| 7. | பண்டாரக்கல் | — | அரசாங்கக் கருவூலத்தில் உபயோகிக்கப் பெற்ற எடைக்கல் |
| 8. | பண்டார நாழி | — | கருவூலத்தினால் ஏற்கப் பெறும் ஒரு அளவு |
| 9. | பண்டாரவாடை | — | கருவூலத்துக்குச் சொந்த மான கிராமம் அல்லது நிலம் |
| 10. | பண்டார உள்ளிருப்பு | — | கருவூல அதிகாரியின் பணிக்கூடம் |
| 11. | பண்டாரத் தீவட்டி | — | பண்டார விளக்கு |
| 12. | பண்டாரத் தெரு | — | கருவூல வீதி |
| 13. | பண்டாரத் தோப்பு | — | கருவூலத்திற்குச் சொந்த மான தோட்டம் |
| 14. | பண்டாரமேளம் | — | இராஜ விளம்பரம் குறிக்கும் பறை |
| 15. | பண்டார வாய்க்கால் | — | பொது வாய்க்கால் (பண்டாரத்தாரால் அமைக்கப்பெற்றது) |
| 16. | பண்டார விடுதி | — | பொது விடுதி (பண்டாரத் தால் நிர்வகிக்கப்படும்) |
| 17. | பண்டார விளக்கு | — | பொது விளக்கு |

TAMIL LEXICON VOLUME IV PART 1

களஞ்சியம்

தென்னிந்திய கோயில் சாசனம்

*Foot Note*

1. The Practical Sanskrit English Dictionary by V.S Apte.
2. Dr. C. Meenakshi, Administration and Social life under the Pallavas.
3. Ibid
4. South Indian Temple As an Employer by Dr. R. Nagaswamy.
5. S.I.I. Volume II Part I No. 67.
6. S.I.I. Volume II Part I Page 74.
7. S.I.I. Volume II Part II Line 34.
8. S.I.I. Volume II Part II Page 152.
9. S.I.I. Volume II Part III Line 3.
10. S.I.I. Volume II Page 254 Line 65.
11. A.R.E. 1919 & 20 No. 670.
12. A.R.E. 1920-21 No. 421.
13. A.R.E. 258 of 1919-20.
14. A.R.E. 233 of 1921.
15. A.R.E. 226 of 1921.
16. A.R.E. 571 of 1896.
17. A.R.E. 553 of 1893.
18. A.R.E. 144 of 1905.
19. S.I.I. Volume XIV No. 257.
20. S.I.I. Volume XIV No. 198.
21. S.I.I. Volume XIV No. 5. & A.R.E. 568 of 1893.
22. A.R.E. 646 of 1919-20.
23. A.R.E. 625 of 1919-20.
24. A.R.E. 51 of 1921-22.
25. A.R.E. 270 of 1919-20.
26. A.R.E. 321 of 1921-22.
27. A.R.E. 446 of 1921-22.
28. A.R.E. 169 of 1921-22.
29. A.R.E. 313 of 1921-22.

# 6

# புடவை

பழைய கற்காலத்தில் மனிதன் மலைகளிலும், காடு களிலும் அலைந்து திரிந்தான். விலங்கோடு விலங்காக வாழ்ந்து வந்தான். விலங்கின் தோல்களையும், மரப்பட்டைகளையும், மரத்தழைகளையும் ஆடையாக அணிந்து கொண்டான். புதிய கற்காலத்தில் மனிதன் ஒரு இடத்தில் தங்கி வாழத்தலைப் பட்டான். அப்பொழுது பயிர்த் தொழிலையும் மீன் பிடித்த லையும், நெசவுத் தொழிலையும் கற்றுக்கொண்டான். இதுவே மனிதனின் முன்னேற்றத்தின் முதற்படியாக அமைந்தது. புதிய கற்காலத்தில் வாழ்ந்த மனிதன் ஏதோ ஒருவகை ஆடையினை உடுத்தியிருக்கின்றான் என்பது தெரிகிறது. ஆடை அணிகின்ற பழக்கம் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்தே வந்திருக்கிறது. 'ஆடையைக்' குறிக்கின்ற சொல் தொடக்க காலத்தில் 'புடவை' என்ற பெயரில் வழங்கி வந்திருக் கிறது. புடவை என்பது ஆண், பெண் இருபாலரும் அணிந்து கொள்ளும் ஆடையைக் குறிப்பதாகும். ஆனால் இப்பொழுது புடவை என்பது பெண்கள் அணிந்து கொள்ளும் ஆடையை மட்டும் குறிக்கிறது. தமிழக மக்கள் எந்த வகையான ஆடையை அணிந்திருந்தனர்? அணிந்து கொண்ட ஆடை எவ்வாறு நெய்யப்பெற்றது? எந்தவகையான நூல்கள் பயன்படுத்தப் பெற்றன? எத்தனை வகை ஆடைகள் தமிழகத்தில் இருந்திருக் கின்றன? இவ்வினாக்களுக்குத் தொல்லியல் சான்றுகள், மேலை நாட்டார் குறிப்புகள், இலக்கியங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், செப்புத் திருமேனிகள் ஆகியவற்றின் துணை கொண்டு விடை அறியலாம்.

'புடவை' என்பது 'புடைவை' என்றும் குறிக்கப்படுகிறது. பெண்கள் இடுப்பின் பக்கவாட்டில் கொசுவம் வைத்து ஆடையைக் கட்டுவதால் புடைவை என்று வழங்கப்பெற்றது. வை என்பதற்கு பொருள் பக்கம் என்பதாகும். புடவை என்பது துணியைக் குறிப்பதாகும். 'புட்டகம்' என்பது இடுப்பின் பின்பகுதி அதாவது புட்டம் என்று அழைக்கப்படுவது. இப்பகுதி யில் ஆடை கட்டப்பெறுவதால் இது புட்டகம் என்று குறிக்கப்

படுகிறது. புடவைக்குச் சீலை என்ற பெயரும் உண்டு. புட்டக வரி என்ற ஒருவகை வரி சீலை விற்போர் செலுத்த வேண்டிய வரியாக இருந்திருக்கிறது. புடவை என்பது 'மடிகள்' என்று வழங்கப்படுகின்றது. மடிகள் என்பது தூய்மையான துணிகளைக் குறிப்பதாகும்.

## தொல்லியல் ஆய்வில் புடவை

திருநெல்வேலி மாவட்டம், ஆதிச்சநல்லூர் அகழாய்வில் ''நைந்த துணியின்'' பகுதிகள் கிடைத்துள்ளன, தங்கநெற்றிச் சுட்டிகள் சிலவற்றில் துளைகள் காணப்படுகின்றன. இவற்றைக் கோர்ப்பதற்கு நூலைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. அரிக்கமேடு, வசவசமுத்திரம், உறையூர் ஆகிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் சாயத் தொட்டிகள் இருந்ததற்கான தடயங்கள் அகழாய்வில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. இவை கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். உறையூர் அகழ்வாய்வில் ஏறக்குறைய கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த செங்கற்களால் கட்டப் பெற்ற சாயமேற்றுவதற்கெனக் கருதத்தக்க கட்டடப்பகுதிகள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. சாயத்தொட்டிகள் இருந்ததற் கான சான்றுகளாக சில ஊர்களின் பெயர்கள் தொட்டி என்ற பெயரில் இன்றும் வழங்குகிறது. விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணை நல்லூர் அருகில் 'தொட்டி' என்ற பெயரில் ஓர் ஊர் வழங்குகிறது. ஆடைகளுக்கு வண்ணமூட்டுகின்ற கலை தமிழ்நாட்டில் சிறந்து விளங்கியிருக்கிறது. வண்ணம் தயாரிக்க காடுகளில் முளைத்திருக்கும் செடிகளிலிருந்து தழைகளும், மரப்பட்டைகளும், அவுரிச் செடியும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவுரிச்செடிகள் நம் நாட்டிலிருந்து மேலை நாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பெற்றன என்பது தெரிகிறது.

## மேலை நாட்டினர் குறிப்புகள்

ஹேரடோடஸ், பிளைனி போன்றவர்கள் நம் நாட்டு நெசவுத் தொழிலைப் புகழ்ந்து போற்றி உள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க, அரேபிய வணிகர்கள் இந்தியத் துணிகளை வாங்கிச் சென்று எகிப்திலும், ரோமிலும் பிற நகரங்களிலும் விற்றனர் என்று குறிப்பிட் டுள்ளனர். உறையூர் நெசவுத் தொழிலுக்கும், பருத்தி ஆடை

களுக்கும், வணிகத்திற்கும் பெயர்போன நகரம் என்று பெரிபுளூஸ் குறிப்பிடுகிறார். தமிழகத்திலிருந்து ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பெற்ற மஸ்லின் துணிகளை மக்கள் அதிக விலை கொடுத்து வாங்கினர். திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து மஸ்லின் துணிகள் ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது தெரியவருகிறது.

சீன வரலாற்று ஆசிரியர் சௌ-ஜு-குவா, கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டிலிருந்து சீனாவிற்கு இறக்குமதியான பொருட்களின் பட்டியலைக் குறிப்பிடும்போது, பருத்தியாலான துணிகளையும், பல நிறமுள்ள பட்டு நூலையும் குறிக்கின்றார். காயல் துறைமுகம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், கடல் பின் தங்கிய காரணத்தால் சிறப்பை இழந்தது. வெனிசீய வணிகரான மார்க்கோபோலோ தமிழ்நாட்டு மக்கள் மானத்தை மட்டும் மூடத்தக்க அளவு உடுத்துகிறார்கள், அரசன் அதிகத்துணி உடுத்துவதில்லை. ஆனால் உயர்ந்த வகைத் துணி உடுத்துகிறான். பல ஆபரணங்களை அணிந்து கொள்கிறான். அவை பொன்னாலானவை. இரத்தினங்கள் பதித்தவை. இரத்தினங்கள் நிறைந்த கழுத்துப்பட்டை, பட்டு நூலில் முத்தும், செம்பும் கோர்த்த மாலை அணிந்திருந்தான் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

### இலக்கியங்களில் புடவை

தொல்காப்பியத்தில் 'கூறை' என்ற சொல் குறிக்கப்படுகிறது. இது ஆடையைக் குறிப்பதாகும். கொங்கு நாட்டில் கொங்கே புகினும் கூறை கொண்டு ஆறு (வழி) அலைப்பர் இல்லை என்ற அடிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. 'கலிங்கம்' என்ற சொல்லும் இலக்கியத்தில் குறிக்கப்படுகிறது. கலிங்க நாட்டில் இருந்து ஒருவகை ஆடை தமிழ் நாட்டிற்கு வரப்பெற்றதால் அந்த ஊரின் பெயரில் அழைக்கப்பெற்றது. ஆடை நெய்வதற்கு வேண்டிய மூலப்பொருளான பருத்தி, தமிழகத்தின் கிராமங்களில் அதிக அளவில் பயிரிடப்பட்டது. இதனைப் பருத்தி வேலிச் சீறூர் என்று புறநானூறு கூறுகின்றது. பருத்தி, இலவமரம், கோங்குமரம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப் பெற்ற பஞ்சினைக் கொண்டு ஆடைகள் நெய்யப்பெற்றன. மரப்பட்டையிலுள்ள நாரினை எடுத்துப் பின்னி மலைவாழ் குறவர்கள் ஆடையாகப் பயன்படுத்தினர் என்பதை 'மரனாருடுக்கை மலையுறை குறவர்' என்று

நற்றிணை கூறும். பட்டு நூலைப் பயன்படுத்திப் பட்டாடை நெய்தனர். எலியினுடைய உரோமத்தைப் பயன்படுத்தி ஆடை நெய்தனர் நம் தமிழ் மக்கள்.

ஆடைகள் அரும்பி மலர்ந்த பகன்றைப் பூப்போன்றும், பாம்பு உரித்த தோல் போன்றும் மூங்கிலின் உட்புறத்தேயுள்ள தோல் போன்றும், புகையை விரித்தாற் போன்றும், பாலாவி யைப் போன்றும் விளங்கின என்பது போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன. ஆடைகள் தடித்தகரையினை உடை யவைகளாகவும், பூவேலைப்பாடு செய்யப்பெற்றும் இருந்தன.

## ஆடை தைப்போர்

தமிழ் நாட்டு மக்கள் நன்கு தைக்கப்பெற்ற ஆடைகளை அணிந்திருந்தனர். ஆடையினைத் தைத்தவர்கள் 'துன்னகாரர்' 'துன்னவினைஞர்' என்று அழைக்கப் பெற்றனர். ஆடைகள் வெளுத்துப் பசையில் தோய்த்தெடுத்து உடுத்தப்பட்டன. மக்கள் தூய்மையான ஆடையை அணிந்திருந்தனர். ஆடைகளுக்கு மணங்கமழும் அகிற்புகையை ஊட்டினர் என்றும், ஏழு காலத் திற்கு ஏற்றாற்போல் உடை அணிந்தனர் என்றும் தெரிகிறது. நீராடும் பொழுது தனி உடை அணிந்தனர். அது 'புட்டகம்' (உள்ளாடை) என்று அழைக்கப் பெற்றது. செந்நிற ஆடையை ஆறலைக் கள்வர்கள் அணிந்தனரென்றும், 'துணைப்புணர்ந்த மடமங்கையர் பட்டு நீக்கித் துகிலுடுத்தினரென்றும், நீலநிறத் துணி படுக்கையில் விரிக்கப் பெற்றதென்றும் இலக்கியங்கள் குறிக்கின்றன.

## அரசன் அணிந்திருந்த ஆடைகள்

அரசன் காலையில் எழுந்து நாள் கடன்களை செய்து முடித்து, மார்பில் சந்தனம் பூசி, முத்தாரங்களையும் தரித்து கரத்தில் வீரவளை பூண்டு கஞ்சி போடப்பட்ட துகிலை இடை யில் அணிந்து தெய்வத்தை வழிபட்டான் என்று மதுரைக் காஞ்சி குறிக்கிறது. தெய்வ வழிபாட்டின்போதும், தானங்கள் செய்த போதும், மஞ்சள் நிறப் பட்டணிந்து இருப்பது வழக்கம். இவை முடிந்தவுடன் மஞ்சள் நிறப்பட்டை நீக்கி, வெள்ளையான துகிலை அணிந்துகொண்டான். இத் துகிலும் கஞ்சி போடப்பட்டிருந்தது.

## ஆடைகள் எத்தனை வகை

நெய்தற்கலை தமிழகத்தில் சிறந்து விளங்கியது. முப்பத்தாறு வகை ஆடைகள் நெய்யப் பெற்றன என்று அடியார்க்கு நல்லார் குறிக்கின்றார். அவை பீதகம், பச்சிலை அர்த்தம், நுண்துகில், கண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டம், வேதங்கம், புங்கர் காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம் வண்ணடை, கவற்றுமடி, நூல், யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப் பொத்தி, கோசிகம் முதலியன.

## ஆடை நெய்தவர் யார்

ஆடை நெய்தலாகிய நெசவுத் தொழிலைச் செய்தவர் களைக் கல்வெட்டுகள் கைக்கோளர், சாலியர், சோழிய சாலியர், பட்டசாலியர், சேணியர் என்று குறிக்கின்றன. இவர் களின் மீதும், பட்டு நூலின் மீதும், பட்டாடையின் மீதும் தறியின் மீதும், அவர்கள் குடியிருப்புக்களின் மீதும் பல்லவர், சோழர், பாண்டியர், சம்புவராயர், விஜயநகர அரசர்கள் பல்வேறு வரிகளை விதித்தனர். பேர்கடமை, பஞ்சுபீலி, பட்டாடை, நூலாயம் பட்டாடைஆயம் தறியிறை, தறிக் கடமை, அச்சுத்தறி, பறைத்தறி, சாலிகத்தறி, குசத்தறி, வாசல்வரி போன்ற வரிகளை விதித்தனர் என்பதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. காசாக்குடிச் செப்பேடு, தண்டந் தோட்டம் செப்பேடு, ஆகிய செப்பேடுகள் தறியைப் பற்றிக் குறிக்கின்றன. இத்தறியிறையிலிருந்து அரசிற்கு வருவாய் வந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. தறியிறை, காசாயம் என்ற பிரிவின் கீழ் வந்துள்ளது. தறியின்மீது விதிக்கப்பட்டி ருந்த வரி காசாகவே விதிக்கப்பட்டிருக்கிறது.

# 7

# கரூர் முத்திரை மோதிரங்கள்

கரூரில் அண்மைக் காலத்தில் கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகள் தமிழக வரலாற்றுக்குப் பல வகைகளில் உதவி புரிந்துள்ளன. இப்பகுதியிலிருந்து தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் செய்யப்பெற்ற காசுகள் கிடைத்துள்ளன. சில காசுகளின் மீது தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன. காசுகள் மட்டுமல்லாமல் மிகுதியான அளவில் முத்திரை மோதிரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மோதிரங்கள் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களால் செய்யப்பெற்றவை. இந்த மோதிரங்கள் வரலாற்றுக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

முத்திரை மோதிரங்கள் பலவற்றில் பண்டைய தமிழ் எழுத்துகள் (தமிழ்ப்பிராமி) பொறிக்கப்பட்டுள்ளன. ஊபாஅன் (உபாசகன்) என்ற பெயர் பொறித்த மோதிரம் ஒன்றும், தாயன் ஓதலன் என்ற பெயர் பொறித்த தங்கத் தாலான மோதிரம் ஒன்றும் கிடைத்துள்ளன. 'தித்தன்', 'பேர் அவதான்' என்ற பெயர்கள் பொறித்த மோதிரங்கள் இரண்டும் வெள்ளியால் செய்யப்பெற்றவை ஆகும். இதில் 'பேர் அவதான்' என்று பொறிக்கப்பட்டுள்ள மோதிரம் அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இம்மோதிரங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இப்பெயர்களில் சில சங்ககாலத் தமிழ்ப் பெயர்களாகவும், சில பௌத்தமதம் சார்ந்த பெயர்களாகவும் உள்ளன. அதனால் கரூரில் பௌத்த மரபினைப் பின்பற்றியவர்களும் வாழ்ந்தனர் என்பது புலப்படும்.

மிதுன சிற்பம் பொறிக்கப்பட்டுள்ள பொன் இலச்சினை மோதிரம் எழுத்துகள் பொறிக்கப்படாமல் கிடைத்துள்ளது. இம்மோதிரத்தில் அழகு வாய்ந்த ஆண், பெண் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றை வினைமாண் நன்கலம் என்று புலவர் கூறுவர். தங்கத்திலுள்ள மோதிரங்களுக்கு

உரியவர்கள் மேன்மை தங்கிய தலைமை நிலையிலிருந்தவர்கள். இதனை மானிடவியல் அறிஞர்கள் மதிப்பிற்கரிய பொருட்கள் (Prestigious goods) என்பர்.

நந்திக் கலம்பகம் பொறி என்று கூறும். சிலப்பதிகாரத்திலும் முத்திரை மோதிரங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. முத்திரை மோதிரங்கள் அரசர்களுடைய ஒப்புதலை வலியுறுத்தப் பயன்படுபவை. பெயர் பொறித்த மோதிரங்கள் குறிப்பிட்ட அரசனையோ அல்லது அரசு அதிகாரிகளையோ குறிப்பதாகக் கொள்ளலாம்.

தித்தன் என்ற பெயர் உறையூரில் ஆட்சி செய்த வேள் ஒருவனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பெயர் பொறித்த மோதிரங்கள் மட்டுமின்றி ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம் நந்திபாதம், பிறை ஆகிய சின்னங்கள் பொறித்த மோதிரங்களும் கிடைத்துள்ளன.

# 8

# காஞ்சியும் கலைகளும்

தமிழ் நாட்டில் உள்ள நகரங்களில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை ஒரு சிலவே ஆகும். அவற்றுள் காஞ்சி, உறையூர் பூம்புகார், தஞ்சை, மதுரை ஆகிய நகரங்கள் சிறப்புடையன. இவற்றுள்ளும் காஞ்சி மாநகர் தொன்மையான வரலாற்றினை யும் கலைச்சிறப்பினையும் பெற்று இன்று வரை சிறந்து விளங்குகின்றது. தமிழகத்தின் வடபகுதியில் அமைந்துள்ள காஞ்சியம்பதி, பல்லவ பாண்டிய, சோழ, விசயநகர மன்னர் களால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. காஞ்சியம் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள மாமல்லபுரம் பல்லவர் காலத்தில் சிறப்பு பெற்று விளங்கியது. தமிழகத்தின் தலை சிறந்த கலைப் படைப்பைத் தன்னுள் கொண்டிருப்பதால் கலையின் சிகரமாக இப்பகுதி விளங்குகிறது.

## மாமல்லபுரத்துக் கற்களுக்குக் கலைமெருகூட்டியவன் யார்?

மாமல்லபுரத்தில் அமைந்த இயற்கையான குன்றுகளில் பல் வகையான கலைச் சிறப்பின் உயிரோட்டத்தை உண் டாக்கியவர்கள் பல்லவர்கள் என்பதில் ஐயமில்லை. முதலாம் மகேந்திரவர்மன். தமிழகத்தில் முதன் முதலில் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவன் என்பதில் எந்தவிதக் கருத்து மாற்றமும் இல்லை. இவன் காலத்தில் இயல், இசை நாடகம், சிற்பம் முதலிய கலைகள் சிறப்புற்று விளங்கியதைப் போன்று குடைவரைக் கோயில்களும் உருவெடுத்தன. இவனுடைய மண்டகப்பட்டு வடமொழிக் கல்வெட்டு இதனைக் குறிக்கிறது.

விசித்திரசித்தன் என்ற பெயருடைய இம்மன்னன் பிரம்மா, சிவன், திருமால் ஆகிய மூவருக்கும் செங்கல், மரம், உலோகம், சுதை இன்றி நூதனமான இந்த ஆலயத்தை எடுத் துள்ளான் என்பது கருத்தாகும் இத்தகைய கோயில்கள் பல்லாவரம், வல்லம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உரு வெடுத்தன. மகேந்திரவர்மன் காலத்துக் குகைக் கோயில்கள்

(Rock-cut temples) எளிமையான நீண்ட, சதுர மண்டபம் போன்ற அமைப்புடையவை. அவற்றின் தூண்கள் மேலும் கீழும் நான்கு சதுரமுள்ளவை. நடுவில் எண்பட்டையினைப் பெற்றுள்ளன,

இவனுக்குப் பின்னர் வந்த நரசிம்மவர்மனான மாமல்லன் குடைவரைக் கோயில்களை மட்டும் எடுக்காமல் குன்றன்ன கோயில்களையும் எடுத்துள்ளான். அமர்ந்த சிம்மம் தாங்கும் தூண்களை இவன் காலத்துக் கட்டடக் கலையில் காணலாம். சிம்மத்தூண்களை உடைய குகைகள் மாமல்லனால் தோற்றுவிக்கப்பட்டன.

மாமல்லனுக்குப் பிறகு இராஜசிம்மன் என்ற பட்டப் பெயரையுடைய இரண்டாம் நரசிம்மன் காலத்தில் காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில், பனமலைக் கோயில் முதலியன தோற்றுவிக்கப்பட்டன. இவை கட்டடக் கோயில்களாகும் (structural temples).

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலில் இராஜ சிம்மனுடைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இதற்கு இராஜராஜன் காலத்திலும் சிறந்த வழிபாடு நடந்துள்ளது என்பது தெரிகிறது. இக்கோயிலுக்கு இராஜராஜன் பெயரால் ஒரு நந்தவனமும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது சிறப்புடையதாகும்.

காஞ்சி கைலாசநாதர் கோயில் திருச்சுற்றுகளில் சிறு ஆலயங்கள் பல உள்ளன. ஒவ்வொன்றிலும் இராசசிம்மனின் பட்டப்பெயர்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிறு ஆலயங்கள் அவனுடைய பட்டத்தரசியான ரங்கபதாகை என்பவளால் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள ஓவியங்கள் பல்லவர் கால ஓவியக்கலைக்கு எடுத்துக் காட்டாக உள்ளன. இராசசிம்மன் காலத்தில் கலை, புதுப் பொலிவுடன் விளங்கியது. பல வகையான கலைப்படைப்புகள், குறிப்பாக மாமல்லைப் பகுதியில் அமைந்தன. இவன் காலத்தில்தான் பெருமளவிற்குக் கட்டடக் கோயில்களும், குடைவரைச் சிற்பங்களும் உருவெடுத்தன. மாமல்லபுரத்துச் சிற்பங்களை உருவாக்கிய மன்னன் யார் என்பதில்

பல்வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. இவற்றுள் தொல் பொருள் ஆய்வுத்துறை முன்னாள் இயக்குநர் டாக்டர். இரா. நாகசாமி அவர்கள் கல்வெட்டுகள் செப்பேடுகள் ஆகியவற்றின் துணைக்கொண்டு மாமல்லபுரத்துச் சிற்பங்களைத் தோற்றுவித்தவன் 'அத்யந்த காமன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற, இராசசிம்மனே என்று குறித்துள்ளார். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் ஒரே மன்னன் காலத்தில் தோன்றியவை என்றும், பின்னர் அவன் இறந்தவுடன் பாதியிலே நின்றுவிட்டன என்றும் குறிக்கின்றார். பல மேலை நாட்டு அறிஞர்கள் இக்கருத்தினைப் போற்றியுள்ளனர்.

## காஞ்சிப் பகுதியில் கலை உருவெடுத்ததற்குக் காரணம்

உலகே போற்றிப் பாராட்டுகின்ற மாமல்லபுரத்துச் சிற்பங்கள் எந்தச் சூழ்நிலையில் உருவெடுத்தன என்று ஆராயும் போது நமக்கு உணர்ச்சி மேலிடுகிறது. சிற்பக்கலை, கட்டடக் கலை, ஓவியக்கலை இன்னும் உள்ள பலவகைக் கலைகளையும் வெளிப்படுத்த மதமும், அதனுடன் இணைந்த கோயில்களுமே சிறந்த அரங்கங்களாக இருந்திருக்கின்றன என்பது உலக வரலாற்றில் எங்கும் காணக் கூடிய ஒன்று. பல்லவ மன்னர்கள் இந்து மதத்தினையும், சமண மதத்தையும் காழ்ப்பின்றிப் போற்றி வளர்த்ததால் அவர்களது தலைநகரான காஞ்சிப் பகுதி பலவகைக் கலைகள் உருப்பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. மேலும் கடிகை போன்றவைகள் இருந்ததால் காஞ்சி சிறந்த கல்விக் கூடமாகவும், கலாச்சாரம், பண்பாட்டை ஊக்குவிக்கும் இடமாகவும் விளங்கியதால் பல்வேறு துறைகளில் திறன்மிக்கோர் இங்குக் கூடினர். இதன் விளைவாக இங்குப் பலவிதக் கலைகளும் தோன்றிச் செழிப்புடன் வளர்ந்தன.

ஓரிடத்தின் கலையின் சிறப்பிற்கு அங்கு நிலவும் பொருளாதார நிலைமை பெரிதும் காரணமாகிறது. இக்கலை தோன்றிச் சிறந்த இரு நகரங்களுமே இவ்வகையில் சிறப்பிடம் பெறுவன. ஒன்று, காஞ்சி பல்லவர்களின் தலைநகர். அங்கு பொருளாதார வறட்சிக்கு இடமே இல்லை; மற்றொன்று மாமல்லை. இதுவே அடுத்த சிறப்பு நகரமான துறைமுகப் பட்டினம். கடல்மல்லையின் வாணிபச் சிறப்பு பெரிது அங்குப் பெரும் அளவில் கலங்கள் இயங்கிக் கொண்டிருந்தன, அங்கு

நிதியின் குவையும், களிறும், குதிரையும் நவமணிகளும் கலங்களில் செல்வதும் வருவதுமாக மிகப் பெருமிதத்துடன் வாணிபம் நடந்தேறியது. இதனைத் திருமங்கை மன்னன்

புலன்கொள் நிதிக் குவையோடு புழைக்கைமா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங்கும் மல்லை கடல்மல்லைத் தலசயனம்

என்று பாடுகின்றார்.

பல்லவர்களும் சாளுக்கியர்களும் ஓயாது போர் செய்து கொண்டிருந்த பகைவர்கள். நரசிம்ம வர்மன் தொடங்கி இரண்டு மூன்று தலைமுறைகளாகப் போர் நடந்து கொண்டே இருந்தது. குடவரைக் கோயில்களைத் தாம் வெற்றி கொண்ட வாதாபியில் பார்த்தனர் பல்லவர்கள். மங்களேசன் காலத்தைச் சார்ந்த (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) குடவரைக் கோயில்களை அவர்களது தலைநகரமான வாதாபியில் காணலாம். அக்கோயில்களின் எழிலையும், கலையையும் கண்ட பல்லவ மன்னன் அது போன்று தன் நாட்டிலும் எழில் மிகு குடவரைகளைச் செய்ய விரும்பியதில் வியப்பு இல்லை. மகேந்திரன் காலத்திலேயே முதல் முதலில் குடவரைக் கோயில்கள் அமைக்கும் முறை தமிழகத்தில் தொடங்கி விட்டதெனினும், இராஜசிம்மன் காலத்தில் தான் (மாமல்லை) முழுதுமாக வளர்ச்சி பெற்றது. இதுவும் அவர்கள் பகுதியில் ஏற்றமிகு இக்கலை பரிணமிக்க ஒரு காரணமாயிற்று எனலாம்.

## பகைவனையும் ஆட்கொண்ட பல்லவர் கலையின் சிறப்பு

முதலாம் நரசிம்ம வர்மனுக்கும், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கும் மணிமங்கலம் என்ற இடத்தில் போர் மூண்டது. இங்குச் சாளுக்கிய மன்னனை வெற்றி கொண்டு அவனுடைய முதுகில் பல்லவனின் சின்னத்தைப் பொறித்து வாதாபி வரை துரத்தி அடித்து, அந்நகரை அழித்த தோடு அமையாமல் அங்குக் கல்வெட்டுகளையும் பொறித்துள்ளான். சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் தீராத பகை இருந்து வந்தது. சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தன் இரண்டாம் புலிகேசியின் தோல்வியினைக் கண்டு

சினங்கொண்டு காஞ்சியின் மீது போர் தொடுத்தான். அப்பொழுது முதல் பரமேஸ்வரவர்மன் காஞ்சிப் பகுதியினை ஆண்டு வந்தான். விக்கிரமாதித்தன் அவனை வெற்றி கொண்டான். இந்த வெற்றி வெறியாக மாறவில்லை. கலையின் சிறப்பினையும், அழகினையும் நிமிர்ந்து பார்க்கின்றான். அவன் வெற்றி அங்கே மண்டியிடுகிறது. பல்லவ மன்னர்கள் பகைவர்களாயிற்றே; அவர்களை வெற்றி கொண்டவன் நான் தானே, எனவே அவர்கள் வடித்த கோயில்களையும் சிற்பங்களையும் வெற்றி கொள்ள வேண்டாமா என்ற எண்ணம் அவனுக்கு எழவில்லை. மாறாக பல்லவ மன்னர்கள் வளர்த்த கலை அங்கே வெற்றி பெறுகிறது. கைலாசநாதர் கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான் என்று பார்க்கின்றபொழுது மாமல்லனின் கலைச்சிறப்பு மேம்படுகிறது.

## காஞ்சிப் பகுதியில் கட்டடக் கலை

பல்லவர் கட்டடக் கலைச் சிறப்பைக் காஞ்சி, மாமல்லை, உத்திரமேரூர் போன்ற இடங்களில் நன்கறியலாம். குடைவரைகள், ஒற்றைக் கற்றளிகள், கட்டடக் கோயில்கள், என்று மூன்று பிரிவில் பல்லவர் கட்டடக் கலை அமைகின்றது. கடற்கரையிலும் சரி, மலை உச்சியிலும் சரி, சமப்பரப்பிலும் சரி வலுவான கட்டடக் கோயில்களை அமைத்த பல்லவர் காலச் சிற்பிகளின் பெயர்கள் பல, நொண்டி வீரப்பன் குதிரைத் தொட்டிக் கல்வெட்டுகளாலும், உத்திரமேரூர் போன்ற கோயில் கல்வெட்டுகளாலும் அறியக் கிடைக்கின்றன. சோழர்கள் எழுப்பிய பிரம்மாண்டமான கோயில்களுக்கு முன்னோடியாகக் கட்டடக் கோயில்களை எழுப்பியவர்கள் பல்லவர்கள்.

சோழர் காலக் கட்டடக்கலைச் சிறப்பை திருவொற்றியூர், மதுராந்தகம், வேளச்சேரி, மீஞ்சூர், திருவிடந்தை, பரமேஸ்வர மங்கலம், வடதிருமுல்லைவாயில் முதலிய இடங்களில் சிறக்கக் காண்கிறோம். திருவொற்றியூரில் இராசேந்திர சோழன் தானே ஆணை பிறப்பித்துக் கோயில் எடுத்துள்ளான். தொண்டை மண்டலத்தில் பல இடங்களில் தூங்கானை மாடக் கோயிலமைப்புகளைக் காண்கின்றோம்.

விஜயநகர காலக் கோயில்களும் தொண்டை மண்டலத்தில் காணக் கிடைக்கின்றன. வானளாவும் காஞ்சி ஏகாம்பரர் கோயில் கோபுரம் காஞ்சியை அடைவதற்கு 12

மைல்களுக்கு அப்பாலேயே காட்சி தந்து சிறப்புச் செய்கின்றது. அண்மையில் விட்டலருக்கு எடுக்கப்பட்ட விட்டலாபுரம் (கோவளத்திற்கருகில்) கோயில் ஒன்றும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வெளிநாட்டவரான ஆங்கிலேயர், பிரஞ்சு நாட்டவர்களது கோட்டைகளும், பிரம்மாண்டமான கட்டடங் களும் 18, 19-ஆம் நூற்றாண்டுக் கட்டடங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## சிற்பக்கலை

தொண்டை மண்டலத்தில் சிற்பக்கலையும் சிறந்து விளங்கியது. கூத்தாடுபவர்களின் சிற்பங்கள் காஞ்சி தான்தோன்றீஸ்வரர் கோயிலில் காணக் கிடக்கின்றது. (கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டு). மாமல்லையில் பாறைச் சிற்பங் களாகவும், குடைவரைச் சிற்பங்களாகவும் எழிலுடன் காணக் கிடக்கின்றன. பல்லவர் சிற்பங்கள் பட்டையான முப்புரிநூல், பரந்த மார்பு ஆகியவற்றுடன் எளிமையாக விளங்குகின்றன. சோழர் காலச் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும் இப்பகுதி யில் காணப்படுகின்றன. மைலாப்பூர் கோலவிழியம்மன் கோயிலில் காணப்படும் காளியின் செப்புத் திருமேனியும் திருவொற்றியூர் தக்ஷிணாமூர்த்தி செப்புத் திருமேனியும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

விஜயநகர நாயக்கர் சிற்பங்கள் பல்வேறு கோயில்களின் மண்டபத் தூண்களில் காணக் கிடக்கின்றன.

## ஓவியக்கலை

தொண்டை மண்டலப் பகுதியில் ஓவியக்கலையும் சிறந்து விளங்கி உள்ளது. காஞ்சி கைலாச நாதர் கோயில் ஓவியங்கள் சிறப்புடையவை. பனமலையில் உள்ள பார்வதியின் ஓவியம் மிகவும் எழில் வாய்ந்தது. பல்லவர் கால ஓவியங்கள் அஜந் தாவில் உள்ள ஓவியங்களையும் இலங்கையில் உள்ள சிகிரியா ஓவியங்களையும் விஞ்சுகின்ற வகையில் அமைந்துள்ளன.

விஜயநகர நாயக்கர் கால ஓவியங்களுக்கு எடுத்துக் காட்டாக வரதராஜப் பெருமாள் கோயில் ஓவியங்கள் விளங்கு கின்றன.

# 9

# ஏறூரும் பெருமான்

இப்படிமம் தாமரை பீடத்தின் மீது வலது காலை ஊன்றி இடது காலை முன் வைத்து இரண்டு கைகளுடன் இடையை வலப்புறம் சாய்த்த நிலையில், நின்ற கோலத்தில் காட்டப் பட்டுள்ளது. வலக்கை முன்புறம் நீண்டு கடக முத்திரை காட்டும் நிலை. இடக்கை காளை மேல் ஊன்றும் நிலை, இரு உதடுகளையும் சற்று குவித்துப் புன்முறுவல் பூத்த முகம், ஏறூரும் பெருமானின் தலையை ஜடாமகுடம் அழகு செய்கிறது. நெற்றியில் நெற்றிப்பட்டமும், தோள்களின் மீது வாகு மாலையும், கழுத்தில் மணிவடம், முத்துவடம், சரப்பளி சவடி ஆகிய கழுத்தணிகளும் மேற்கைகளில் இலைக்கருக்கு முகப்புடைய தோள் வளையும், முன் கையில் கைவளையும், காப்பும், விரல்களில் மோதிரமும், முழங்கையில் கடகமும், மார்பில் புரிநூலும், உதரபந்தமும் இடையிலிருந்து மேல் தொடைவரை சிம்ம முகப்புடைய இடைக் கச்சையும், காலில் பாதரசமும் அலங்கரிக்கின்றன. விரிந்த வட்டமுகம், அகன்ற தோள், பரந்த மார்பு, திண்மையான உடற்கட்டு, அழகிய அங்கங்களை கொண்ட இப்படிமத்தின் கலை அழகு தனிச் சிறப்பு வாய்ந்தது. இப்படிமம் முழுவதும் கனமாக வார்க்கப் பட்டு தமிழ்நாட்டுச் செப்புத்திருமேனிகள் வடிக்கும் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இப்படிமம் வடிக்கப்பட்டுள்ள பாங்கு, ஆடை அணிகலன் கள், முடி அமைப்பு, உருவ அமைதி ஆகியவற்றைக் கொண்டு நோக்கும்பொழுது இது சோழர்காலப் படைப்பமைப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

இதன் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம். முதலாம் இராஜேந்திர சோழன் காலத்திய ஏறூரும் பெருமான் படிமங்களோடு இது ஒப்பு நோக்கத்தக்கது. தமிழ்நாட்டில் செப்புத்திருமேனிகள் வடிக்கும் கலை சிறந்து விளங்கி இருந்தாலும், சோழர்கள் காலத்தில் செப்புத் திருமேனிகள் வடிக்கும் கலை உன்னத நிலையை

அடைந்ததால், இக்காலம் செப்புத்திருமேனிகளின் பொற்காலமாகும். இக்காலத்தில் நடராசர் செப்புத்திருமேனிகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. ஆனால் ஏறூரும் பெருமான் திருமேனிகள் மிகுதியாக எடுக்கப் பெறவில்லை. எடுக்கப் பெற்றுள்ள செப்புத்திருமேனிகள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. திருவெண்காடு,[1] ஏறூரும் பெருமான் செப்புத் திருமேனி முதலாம் இராசேந்திரன் கலைப் படைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இந்த அமைப்பில் வேறொரு திருமேனியைப் பார்க்க இயலாது. வேதாரண்யத்தில்[2] கிடைத்த காளை வாகன தேவர் திருவுருவம் சற்று மாறுபட்ட தலைக் கோலத்தைக் கொண்டுள்ளது. நாகை காயிதேமில்லத் மாவட்டம், நன்னிலம் வட்டம், அம்பர்மாகாளம்[3] திருமேனியை இப்படிமம் ஒத்துள்ளது. எனினும் அம்பர்மாகாளம் காளை வாகன தேவரைவிட ஒரு நூற்றாண்டு இது காலத்தால் முற்பட்டது எனலாம்.

விழுப்புரம் மாவட்டத்தில் சோழர் காலச் செப்புத் திருமேனிகள் மிகுதியாகக் கிடைக்காவிட்டாலும், கிடைத்துள்ள ஒரு சில செப்புத்திருமேனிகளில் அழகு மிக்கதாக இத்திருமேனியும் விளங்குகிறது. இம்மாவட்டத்தில் கல்பட்டு என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்ட இப்படிமம் தற்பொழுது கடலூர் அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

1. C. Sivaramamurti, Indian Bronze' PP. 54, Fig. 48, 1960
2. O. C. Ganguly, 'South Indian Bronzes', Plate XCIV
3. M. Chandramurti, 'Dated Chola Bronzes in Ambar Mahalam' Damilica, Vol. II, Part.3. PP. 55-59, Fig. 27-31.

# 10

# டாக்டர் ஆனந்தகுமாரசாமியின் கலைத்தொண்டு

பாரதக் கலையின் வரலாற்றைப் பார்புகழப் பறை சாற்றிய அறிஞர் பெருமக்களில் முன்னோடியாகவும், தலை சிறந்தவராகவும் விளங்கியவர் டாக்டர் ஆனந்தகுமாரசாமி அவர்கள். இவர் கி.பி. 1857-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 22-ஆம் தேதி கொழும்பில் பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் முத்துக்குமாரசுவாமி, தாயின் பெயர் எலிசபெத் கிளேபீபி என்பதாகும். இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஆவார். ஆனந்தகுமாரசாமி அவர்களின் தந்தை முதன்முதலில் கீழைத் தேசங்களில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் ஆவார். இவர் 'அரிச்சந்திர நாடகத்தை' ஆங்கிலத்தில் எழுதினார். இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டு கொழும்பில் இறந்துபட்டார். பின்னர் குமாரசாமி அவர்கள் தன்னுடைய தாயுடன் இங்கிலாந்து சென்றார். அங்கு விக்லிவ் கல்லூரியில் சேர்ந்து படித்தார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் தாவர இயலிலும், புவி இயலிலும் பட்டம் பெற்றார். கொழும்பை விட்டுச் சென்ற அவர் மீண்டும் 1903-ல் இலங்கைக்கு வந்தார். இங்கு மூன்று ஆண்டு காலம் தாதுப் பொருள்கள் ஆராய்ச்சிப் பகுதித் தலைவராகப் பணிபுரிந்தார். இப்பணியில் பாராட்டும் புகழும் பெற்றார், இதற்குக் காரணம் இவர் தோரியனைட் என்ற கனிமத்தைக் கண்டுபிடித்ததேயாகும். இதன் காரணத் தால் லண்டன் பல்கலைக்கழகம் இவரைப் பெரிதும் பாராட்டு கின்ற வகையில் டி.எஸ்சி. என்ற டாக்டர் பட்டத்தை வழங்கியது.

இவர் இலங்கையில் தங்கியிருந்த நாள்களில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த விகாரங்களையும் கோயில்களையும் கண்டு பிடித்தார். இவ்வரலாற்றுச் சின்னங்களின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டார். அப்பொழுது இலங்கை மக்கள் மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கிக் கிடந்ததைக் கண்டு

மனம் வருந்தினார். ஆகவே 1905-ஆம் ஆண்டு இலங்கையில் 'சீர்த்திருத்த சபை' ஒன்றை நிறுவினார்.

இவர் எழுதிய கலையும் சுதேசியும் - தேசிய இலட்சியக் கட்டுரை என்னும் ஆங்கில நூல் இந்திய மக்களிடையே ஒரு பெரும் கிளர்ச்சியினைத் தோற்றுவித்தது. சுதேசிப் பொருள்களை ஆதரிக்க வேண்டிய அவசியம் பற்றியும், இந்தியக் கலைகள் பற்றியும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை வெறும் கட்டுரைகளாக அமையாமல், பல்வகை ஆய்வுக் கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. இதன் மூலங்கள் சமஸ்கிருதம், பாலி, பிராகிருத, கிரேக்க, இலத்தீன், ஜெர்மன், பிரஞ்ச், ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் தழுவியும், அவ்விலக்கியச் சாயலை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

இவர் இந்திய இசைக் கலையினைப் பற்றி கூறும் பொழுது, இந்திய இசைக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், பாரத நாட்டில் இசைக்கலை தொன்றுதொட்டு வாழ்ந்து வந்துள்ள கலை என்றும், இத்தகைய சிறப்பு வாய்ந்த கலை வளர்ச்சியினை அறியாமல் மேற்கத்திய இசைக் கருவிகளைக் கொண்டு இசை பயிற்றுவிப்பது மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றார்.

பாரத நாட்டின் யோகம் பற்றிய கலையின் சிறப்பினைக் குறிக்கும் பொழுது யோகப் பயிற்சி மூளைக்கு உற்சாகம் ஊட்டுவதோடு அமையாமல், சிந்தனையைத் தூண்டுவதற்கு உறைவிடமாகவும் விளங்குகிறது. இப்பயிற்சியின் மேம் பாட்டினை உணர்ந்து ஒவ்வொரு பாரதக் குடிமகனும் அறிந்து பயனடைய வேண்டும் என்று கூறுகின்றார். மேலும் இவர் பாரத குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தேசிய உணர்வு இருக்க வேண்டிய அவசியம் பற்றியும், வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எல்லோரிடத்திலும் ஒற்றுமை மனப்பான்மையிருக்க வேண்டிய அவசியத்தையும், ஒற்றுமை இல்லா அறியாமை பற்றியும் வலியுறுத்துகின்றார்.

இவர் எழுதிய கலை நூல்களில் சிறந்து விளங்குவது 'சிவ நடனம்' என்னும் நூல். இது தெய்வ மணங்கமழும் பாரதக் கலையின் உண்மைத் தத்துவத்தை உலகுக்கு எடுத்துக்காட்டக்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No.
Date 51
MADRAS-28.



கூடிய வகையில் முதன்மை பெற்று விளங்குகிறது. பன்னெடுங்காலமாக விளங்கிய மூட நம்பிக்கைகளை ஆய்வதில் தனிச்சிறப்புக் கொண்டதாகவும், மிக நுண்ணிய கருத்தைத் தேடிச் செல்வதிலும், உண்மைகளை அறிவதற்கு என்றும் சுலபமான வழிகள் இருப்பதையும், தலைமுறை, தலைமுறையாக ஆட்சி செலுத்தும் வகையில் அமைந்துள்ள நடராசரின் திருவுருவம் புதியது அல்ல என்றும் ஆனந்தகுமார்சாமி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பாரதக் கலையின் ஈர்ப்புச் சக்தியான நுண்கலைப் பொருள்களைச் சேகரிக்கும் பொருட்டு 1910-ஆம் ஆண்டு பாரதத்தின் பல பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து. கலைப்பொருள்களைச் சேகரித்து அலகாபாத் நகரில் ஒரு கலைக் காட்சியினையும் அமைத்தார். இந்தியாவில் ஒரு 'கலா பவனத்தைத்' தோற்றுவிக்க வேண்டுமென்று பெரும்பாடு பட்டார். ஆனால் இம்முயற்சிக்குப் போதிய ஆதரவு கிடைக்காத காரணத்தால் மிகவும் வேதனை அடைந்தார். பின்னர் அமெரிக்காவிற்குச் சென்று பாஸ்டன் நகரில் உள்ள அருங் காட்சியகத்தில் பணியாற்றினார்.

பாஸ்டன் நகரத்தில் இருந்த நாட்களில் பாரதக் கலைகளின் சிறப்பினையும் பண்பாட்டினையும் பற்றி உலகுக்கு விளக்குவதில் கண்ணுங்கருத்துமாய் விளங்கினார். காந்தாரப் பகுதியில் கண்டு எடுக்கப்பட்ட புத்த செப்புத் திருமேனிகள் கிரேக்கச் சிற்பக் கலைப்பாணியைப் பின்பற்றியவை என்னும் போலிக் கொள்கையைத் தக்க ஆதாரம் காட்டி மறுத்தவர் இவரே.

'அமராவதி' என்ற இடத்தில் கண்டு எடுக்கப்பட்ட சிலைகளைக் கொண்டு 'யாழின் வடிவம் இன்னதென்று முதன் முதலாக வரையறுத்துக் கூறியவர் இவரே. இவர் தன்னுடைய கடைசிக் காலத்தில் வேதங்களின் தத்துவார்த்தங்களை விளக்குவதில் ஈடுபட்டு இருந்தார் என்று பார்க்கும் பொழுது, இவருடைய பல்வகைப் புலமைத் திறன் வெளிப்படுகின்றது.

பாரதக்கலைகள் பற்றியும், கட்டடக்கலை பற்றியும் ஏராளமான வரலாற்று நூல்கள் எழுதப்பெற்றன. இந்த வரிசையில்,

இன்றளவும் பாரதக் கலைக்கும் கட்டடக் கலைக்கும் மிகச் சிறந்த நூல்களாக ஆனந்தகுமாரசாமி அவர்களின் நூல்கள் விளங்குகின்றன.

பாரதக் கலையும், ஐம்புதீபக்கலையும் என்ற நூலில் இவ்விரு கலைகளும் மேற்காசியக் கலைப்பாணியுடன் திகழ் வதைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் பாரத இலக்கியங்களின் அடிப்படையில் தோன்றிய பாரதப் பாரம்பரியத்தை வெளிப் படுத்துகின்றன. காஷ்மீர், நேபாளம், திபெத் ஆகிய இந்தியப் பகுதியின் சில பாரம்பரியத்தினை விளக்குகின்றன. நேபாளத் திற்கும், திபெத்திற்கும் தொடர்பு ஏற்பட்டபொழுது நேபாளக் கலை திபெத்திற்குச் சென்றது. இவ்விந்தியக் கலைப்பாணி, சீனக்கலைப்பாணியுடன் கலந்து திகழ்ந்தது. சீனக்கலைப் பாணி பௌத்தத்தின் கலைப்பாணியினைப் பின்பற்றியிருந்தது. இந்தியக் கலைப்பாணியும், சீனக்கலைப்பாணியும் சேர்ந்த செப்புத் திருமேனிகள் உருவாயின. அத்திருமேனிகளின் ஆடை யின் தோற்றம் இந்தியக் கலைப்பாணியினைப் பின்பற்றியே அமைந்திருந்தது. இவைகளை உற்றுநோக்கும் பொழுது நேபாளச் செப்புத் திருமேனியின் கலை பெரும்பாலும் இந்தியக் கலைக்குரிய அம்சத்துடனும், நல்ல வடிவமைப்புடனும், அமைதியே உருவாகவும் காணப்படுகின்றன என்று 'இந்திய இந்தோனேசியக் கலை வரலாறு' என்ற நூலில் குறிப்பிட் டுள்ளார்.

இதே நூலில் திராவிட, ஆரியர் கலைகளைப் பற்றியும், சிசுநாக, நந்த, மௌரிய, சுங்க, ஆந்திரக் கலைகளின் தன்மை யினையும், குஷானர், குப்தர் கலையின் சிறப்பினைப் பற்றியும் இராஜபுத்திர ஓவியங்களின் அழகினையும், சாளுக்கியர், இராட்டிரகூடர், பல்லவர், சோழர் காலக் கலையின் மேம் பாட்டினையும் கலை, கைவினைப் பொருள்கள் பற்றிய ஆய்வினையும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதி உள்ளார்.

நடராசரின் நடனம் இயற்கையின் கூறுபாடுகளை வெளிப்படுத்துவதாகும்; உலக ஆசாபாசங்களையும், கெட்ட எண்ணங்களையும் பொறாமையையும் அழிக்கக் கூடிய வகை யினை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்று குறிக் கின்றார். நடராசர் நடனத்தின் அடிப்படைத் தத்துவம், சுழன்று ஆடும் உலக சக்தியின் தோற்றமாகும். உலக

தத்துவங்கள் எதுவாக இருந்தாலும், காலப் போக்கிற்கு ஏற்ப அதற்குரிய உருவாக நடராசரின் திருவுருவம் அமைந்துள்ளது என்றும், அந்தி மயங்கும் நேரத்தில் இமயமலையில் தெய்வீக இசையின் மத்தியில் ஆடும் நடனம் ஒன்று உண்டு; இதைச் 'சிவப்பிரதேசத் தோத்திரம்' என்ற செய்யுள் சித்தரிக்கின்றது.

உமையம்மை, பொன்னாலும், மணியாலும் அணி செய்யப் பெற்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கும் காட்சியும், கலைவாணி வீணை மீட்டவும் இந்திரன் குழல் ஊதவும், பிரம்மா தாளம் போடவும், இலக்குமி பாடவும், திருமால் மத்தளம் வாசிக்கவும் சிவபெருமான் ஆடும் நடனத்தை விண்ணவர் கண்டு வியந்தனர். இறைவன் இடுகாட்டில், பார்வதியுடனும், பூதகணங்களுடனும் ஆடிய ஊழிக்கூத்துத் தாண்டவம் மிகவும் புகழ் வாய்ந்தது. இவ்வகை நடனம் எல்லோரா, எலிபெண்டா ஆகிய இடங்களில் சிற்பங்களாக வடிக்கப்பெற்றுள்ளன.

உலகிற்கு நடுநாயகமாக விளங்கும் தில்லையம்பதியில் உள்ள பொன்னம்பலத்தில் சபை நடுவே ஆடும் நடனம் ஆனந்த தாண்டவமாகும். இந்த நடன வடிவமே தென்னிந்திய செப்புத்திருமேனிகளில் வடிக்கப் பெற்றுள்ளது.

ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து செயல்களை செய்யும் முழு உருவமாக நடராசர் வடிவம் அமைந்துள்ளது. உண்மை விளக்கம் என்ற நூல் நடராசர் ஏந்தி உள்ள உடுக்கை உலகின் தோற்றத்தையும், அபயமளிக்கும் கை காத்தலையும், கையில் உள்ள தீப்பிழம்பு அழித்தலையும், முயலகனின் மீது வைத்துள்ள கால் அறியாமையினை மறைத்தலையும் காட்டுகிறது என்கிறது. தூக்கி ஆடும் கால் முக்தியினைக் குறிக்கிறது. திருமூலர் நடராசர் உருவை

காளியோடாடிக் கனகாசலத்தாடிக்
கூளியோடாடிக் குவலயத்தேயாடி
நீடிய நீர்தீகால் நீள் வானிடையாடி
வானுற அம்பலத்தேயாடும் நாதனே - என்று குறிப்பிடுகின்றார்.

இறைவன் உயிர்களின் உள்ளத்தில் மறைந்து நிற்கும் பாசத்தை அழிப்பதற்குப் பக்தனின் உள்ளத்தில் ஆடுகின்றார். உள்ளக் கிடக்கையில் உள்ள அகந்தையை, மடமையைப் போக்குவிக்கும் தொழிலுக்கு இறைவன் உரியவன் என்பதை உண்மை விளக்கம்;

''மாயைதனை உதறி, வல்வினையைச் சுட்டு, மலம் சாய அமுக்கி, அருள்தானெடுத்து - நேயத்தால் ஆநந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல் தானெந்தையார் பாதம்தான்'' என்று கூறுகிறது.

நடராசர் வடிவம், விஞ்ஞானம், மதம், கலை இவை அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் ஒளியாக அமைந்துள்ளது. இது ஒரு மதத்தினர், ஒரு வகுப்பினர் அல்லது ஒரு தேசத்து அறிஞர்கள் மட்டுமின்றி, உலகத்தில் உள்ள எல்லா தேசத்திலும், எல்லா காலத்தும் தோன்றிய அறிஞர், பக்தர், கலைஞர் ஆகிய அனைவரும் போற்றும் கலைப்படைப் பாகும். இப்படைப்பின் ஒவ்வொரு பகுதியும் மதக்கட்டுப்பாடு களையோ அல்லது மூடநம்பிக்கைகளையோ குறிப்பவை அல்ல; உண்மை நிலைகளை கூறுபவையாகும் என்று கருத்துரைக் கிறார் டாக்டர் ஆனந்தகுமாரசாமி.

பாரதத்தின் கலை வரலாற்றை படைத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியினை மட்டுமே எடுத்து எழுதி வந்துள்ளனர். ஆனால் ஆனந்தகுமாரசாமி அவர்கள் இமயம் முதல் குமரி வரை பாரதத்தின் எல்லாப் பகுதிகளிலும், நிலவிய கலையின் வரலாற்றை முறைப்படுத்தி, ஒவ்வொரு பகுதியிலும் தோன்றிய கலைகளைச் சிறப்புடன் அமைத்துச் செல்வது பாராட்டுக்குரிய அம்சமாகும். இந்த வகையில் பாரதக் கலைக்கு அவர் ஆற்றியுள்ள பணி, பாரத மக்களுக்குக் கலை வரலாற்றில் ஆர்வத்தை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நம் தாய்த்திருநாட்டின் கலை வரலாற்றைத் தெரிந்து கொள்வதும், கலைச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாத்தலும் நம் கடமையாகும்.

11

# விக்டோரியா மகாராணியின் வெள்ளிப் பட்டயம்

செங்கற்பட்டு என்று தற்போது அழைக்கப்படும் இவ்வூர் 200 ஆண்டுகளுக்கு முன்பு செங்கழுநீர்ப்பட்டு என்று அழைக்கப் பட்டு வந்துள்ளது என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. இங்குக் கோதண்டராமசுவாமி கோயில் அமைந் துள்ளது. இக்கோயில் முதன் முதலில் செங்கல்பட்டிலுள்ள கோட்டைப் பகுதியில் இருந்ததாகத் தெரிகிறது.

கி.பி. 1885-ஆம் ஆண்டு கோட்டையில் அமைந்திருந்த கோதண்டராமசுவாமி கோயில் திரு. கிருஷ்ணநாயுடு என்பவ ரால் நகர்ப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்ற செய்தி இக்கோயிலின் கிழக்குப்பக்கக் கோபுரத்தின் நுழைவு வாயிலின், வடக்குப்பக்கச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு வாயிலாகத் தெரிய வருகிறது.

கோயிலின் நுழைவு வாயிலில் மிகவும் உயரமான இரண்டு மரக்கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. தென்பக்கக் கதவில் வெள்ளிப் பட்டயம் ஒன்று பதிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது கதவிலிருந்து எடுக்கப்பட்டு கோயில் நிர்வாகத்தார் பொறுப்பில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

## வெள்ளிப் பட்டயம்

அகழாய்வில் கிடைத்துள்ள பானை ஓடுகளின் மீதும், காசுகளின் மீதும், ஓலைகளின் மீதும், கருங்கற்கள் மீதும், செப்புத் தகடுகளின் மீதும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. செப்புத் தகடுகள் மட்டுமல்லாமல் பொன் தகடுகளின் மீதும், வெள்ளித் தகடுகளின் மீதும் எழுத்துகளைப் பொறிக்கின்ற வழக்கம் நீண்ட நெடுங்காலமாகத் தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்கிறது.

இந்த வெள்ளிப் பட்டயத்தின் நீளம் 33 செ.மீ. அகலம் 23 செ.மீ. ஆகும். நான்கு பக்கங்களிலும் துவாரங்கள் உள்ளன. இந்தத் தகடு சற்று மங்கலாகக் காட்சி அளிக்கிறது. இதில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்துகள் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வடிவத்தில் உள்ளன. இப்பட்டயத்தில் 11 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

1. செங்கல்பட்டு ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி சந்நிதியில் கலியு(க)
2. காதி 4987-ல் நிகழும் விய ஹு மாசி மீ 6உக்கு 1887 பிப்
3. பிரவரி மீ 16உ நமது விக்டோரியா சக்கரவர்த்தினி அவர்களுடைய
4. 50-வது ஆண்டின் பெருமையை உற்சவ கோலா கலங்களு
5. டன் அன்னதான வஸ்திரதான முதலியவைகளை செய்து யாவறாலும்
6. கொண்டாடப்பட்டது அது சமயத்தில் தேவஸ்தான தர்மபரிபாலகர்
7. மா-குப்புசாமி நாயுடுகாரு குமாரர் செங்கல்பட்டு டிஸ்டிரீக்கு கோர்ட்டு
8. ரீடர்-மா-றாமானுஜ நாயுடுகாரு மாகாஷிமை தங்கிய நமது சக்கிரவர்தி
9. நியவர்கள் பெயரால் ஸ்ரீ கோதண்டறாமஸ்வாமிக்கி சுமார் 300 முன்னூறு
10. ரூ. விலையுள்ள பொன் காசு மாலையை சமர்ப்பித்து புகழப்பட்டது
11. சர்வம் ஸ்ரீ கிருஷ்ண பிரிதி

செங்கற்பட்டில் உள்ள ஸ்ரீ கோதண்ட இராமசுவாமி சந்நிதியில் கலியுகாதி 4987, விய வருடம் மாசி மாதம் 6 ஆம் தேதிக்கு சமம் கி. பி. 1887 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி, விக்டோரியா சக்ரவர்த்தினி அவர்களுடைய 50 ஆவது ஆண்டின் பெருமையைச் சிறப்பிக்கின்ற வகையில் உற்சவ கோலாகலங்களுடன் அன்னதானமும் வஸ்திரதானமும் மக்களுக்குக் கொடுத்து யாவராலும் கொண்டாடப்பட்டது என்ற குறிப்பு இப்பட்டயத்தில் தரப்பட்டுள்ளது.

அதேசமயத்தில் ஸ்ரீ கோதண்டராமசுவாமி தேவஸ்தான தர்ம பரிபாலகர் மா. குப்புசாமி நாயுடு குமாரர் செங்கற்பட்டு மாவட்ட கோர்ட்டு ரீடராக இருந்த இராமானுஜ நாயுடு அவர்கள் பெருமை தங்கிய சக்கரவர்த்திநியவர்கள் பெயரால் ஸ்ரீகோதண்டராமசுவாமிக்கு சுமார் 300 ரூபாய் விலையுள்ள பொன் காசு மாலை ஒன்றைச் சமர்ப்பித்துப் புகழப் பட்டதும் குறிக்கப்படுகிறது.

## பொன் காசு மாலை

பொன் காசுகள் கோர்க்கப் பெற்றுள்ள இக்காசு மாலையில் 67 பிரான்சு காசுகளும், (5 பிராங்சு காசுகள் வீதமும்) ஒரு 1/2 சவரன் இராணி விக்டோரியாவுடையதும், 2 காசுகள் (பிராங்சு) முகப்பு வேலைப்பாடுகளுடையதும், காணப்படுகின்றன. திருகு, சிம்ம முகம், பூக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. ஆக மொத்தம் 70 பொன் காசுகள் இந்த மாலையை அலங்கரிக்கின்றன. கி.பி. 1887-ல் இப்பொன் காசு மாலையின் மதிப்பு சுமார் 300 ரூபாய் என்று பார்க்கும் பொழுது பொன் விலையின் மதிப்பு தெரிய வருகிறது. பொன் காசு மாலையின் மொத்த எடை 12.2 தோலாவாகும்.

# 12

# நாடகக் கலை

தமிழ் இலக்கியங்களை இயல், இசை, நாடகம் என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர் நம் பண்டைத் தமிழ் மக்கள். இயற்றமிழும், இசைத்தமிழும் இணைந்து வெளிப்படுவது நாடகத் தமிழாகும். நாடகத் தமிழில் கூத்து, நடனம், நாட்கம் ஆகியவை அடங்கும். தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நாடகம் உருப்பெற்று வளர்ந்து வந்துள்ளது என்பதை 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்று தொல்காப்பியர் குறிக்கின்றார். பண்ணை, ரசம், பாவம் போன்ற நாடகத்தைக் குறிக்கும் குறிப்புகள் தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகின்றன. 'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' என்று மணிமேகலையும், 'பண்கனியப் பருகிப் பயனாடகம்' என்று சிந்தாமணியும், 'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்று திருவாசகமும் நாடகத்தின் சிறப்பினைத் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் போன்ற நாடக இலக்கண நூல்களும்; அகத்தியம், பரதம், கூத்தநூல் போன்ற நாடகத் தமிழ் நூல்களும் பண்டுதொட்டு வழக்கில் இருந்து வந்துள்ளன.

### கூத்து

தொன்மைக் காலத்தில் நாடகத் தமிழ் கூத்துகள் மூலம் வளர்ந்தது. 'நாடகம் கதை தழுவி வரும் கூத்து' என்று அடியார்க்கு நல்லார் குறிக்கின்றார். இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் கூத்துகள் குறிக்கப்படுகின்றன. 'கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே' என்று வள்ளுவர் குறிக்கின்றார். கூத்துகளை ஆண், பெண் இரு பாலரும் ஆடினர். கூத்துகள் ஆடும் ஆண்களைக் கூத்தர் என்றும் பெண்களைக் கூத்திகள் என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. அவர்களுக்கு அளிக்கப் பெற்ற நிலங்களுக்கு 'கூத்தக்காணி' என்று பெயர். சாந்திக் கூத்து, சாக்கைக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து ஆகிய கூத்துகள் வழக்கில் இருந்திருக்கின்றன.

## சாந்திக்கூத்து

இது ஒரு வகை நடன நாடகமாகும். இதில் நாயகன் சாந்தமாக ஆடியதால் இது சாந்திக் கூத்து என்று அழைக்கப் பெற்றது. நாடகம் சாந்திக் கூத்தின் பாற்பட்டது என்பதைச் சிலம்பு,

"சாந்திக் கூத்தே தலைவன் இன்பம்
ஏந்தி நின்றாடிய ஈரிருநடம் அவை
சொக்கம் மெய்யே அவிநயம் நாடகம்"

என்று குறிக்கிறது.

விக்கிரம சோழனின் திருவேங்கைவாசல் கல்வெட்டு, திருவேங்கைவாயில் ஆண்டார் திருமுன், சித்திரைத் திருவிழா வில் ஒன்பது தடவை சாந்திக் கூத்து நிகழ்ந்ததைக் குறிக்கிறது. இந்தக் கூத்தை ஆடிய 'எழுநாட்டு நங்கை' என்பார்க்குப் பெருவாயில் நாட்டவரும், மகேசுவரர்களும் நிலம் அளித்தனர் என்று கூறுகிறது.

'சதிரன் இராஜன் ஆன குலோத்துங்க சோழ கிடாரத் தரையன்' என்பான் திருவேங்கைவாசல் திருக்கோயிலில், வைகாசித் திங்களில் திருவாதிரைத் திருவிழாவின்போது 'சதிரவிடங்கநாயகர்' என்ற திருமேனியை எழுந்தருளுவித்து, சாந்திக் கூத்து நிகழ்த்த இரு பெண்களுக்கு நிலமளித்த செய்தியினை இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## சாக்கைக் கூத்து

பண்டுதொட்டு தமிழகத்தில் வழங்கிவந்த ஒருவகைக் கூத்து. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் கொணர்ந்து வஞ்சிமாடம் புகுந்து, ஓலக்க மண்டபம் செல்லும்பொழுது இடையிலுள்ள நாடக அரங்கத்தில் நிகழ்த்தப்பெற்ற கூத்தொன்றைக் கண்டான். அந்தக் கூத்து 'பறையூர் கூத்தச் சாக்கையன்' என்பவனால் நடிக்கப்பெற்றது. இதற்குக் கொட்டிச் சேதம் என்று பெயர். இது சிவன் பார்வதியுடன் சேர்ந்து ஆடிய கூத்து. இதை கொடுகொட்டி என்று அழைப்பர். பதினோரு புற நாடகங்களில் இதுவும் ஒன்று.

இதனைச் சிலம்பு,

> "உமையவள் ஒரு திறனாக ஓங்கிய
> இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
> பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
> கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து ..

என்று குறிக்கிறது.

முதல் இராசேந்திரனின் கீழ்ப்பழுவூர்க் கல்வெட்டு. திருவாலந்துறை நல்லூரில் அற்பசித் திங்களில், திருவிழாவின் பொழுது, அசுவதி நாளில் சாக்கைக் கூத்து மூன்று அங்கங்கள் நிகழ்த்த ஆலையூர்ச் சாக்கைக்கு, ஒன்றரை கழஞ்சு பொன்னும் மூன்று கல நெல்லும் அளிக்கப் பெற்றதாகக் கூறுகிறது. இதே மன்னனின் காலத்தைச் சார்ந்த காமரசவல்லிக் கல்வெட்டு, மார்கழி, வைகாசித் திங்களில் திருவாதிரைத் திருநாட்களில் மூன்று முறை சாக்கைக் கூத்துஆடச் 'சாக்கை மாராயன் விக்ரம சோழன்' என்பார்க்குக் காமரசவல்லிச் சதுர் வேதி மங்கலத்தார் நிலம் அளித்தனர் என்று குறிக்கிறது.

## ஆரியக் கூத்து

இது புராண, இதிகாசக் கதைகளைத் தழுவிவரும் கூத்தாகும். இரண்டாம் ஆதித்தனின் திருவிடைமருதூர்க் கல்வெட்டு தைப்பூசத் திருநாளிலும், வைகாசித் திருவாதிரை யின்பொழுதும், திருவிடைமருதூர் உடையார் திருமுன், ஆரியக் கூத்து நிகழ்ந்ததைக் குறிக்கிறது. இந்தக் கூத்தை ஆடிய 'சித்தி மறைக்காடனான திருவெள்ளறைச் சாக்கை' என்ற ஆடல் வல்லானுக்கு, ஆழ்வார் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அதிகாரிகள் நாடகசாலையில் கூடியிருந்து பதினாறு கல நெல் கொடுப்பதற் காக ஒரு வேலி நிலம் ஒதுக்கினார் என்பதைக் குறிக்கிறது.

முதற் குலோத்துங்கனின் கல்வெட்டு ஒன்று தமிழ்க் கூத்து பற்றிக் குறிக்கிறது. மிழலை நாட்டு வீரநாராயண புரத்தில் கைலாசமுடைய மகாதேவர் கோயிலில், சித்திரைத் திருவிழாவில், ஐந்து நாட்கள் தமிழ்க்கூத்து நிகழ்த்த, 'விக்ர மாதித்தன் திருமுதுகுன்றனான விருதராச பயங்கர ஆசார்யன்' என்பவர்க்கு நாகன்பாடியில், கூத்தக்காணியாக, நகரத்தாரும் கோயிலாரும், நிலம் அளித்த செய்தி கூறப்படுகிறது.

## நாடக சாலை

தமிழகத்தில் நாடக சாலைகள் இருந்ததை இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. கூத்தறாத பள்ளி என்று நாடகச் சாலையினைச் சிந்தாமணி குறிக்கிறது. சிலப்பதிகாரம், பெருங் கதையிலும் இதைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. [1]

'நாடக சாலைகள்' இருந்ததைக் கல்வெட்டுகளும் நமக்குத் தெரிவிக்கின்றன. 'அத்தாமன் அய்யாறனான கண்ட தோள் கண்டப்பையன்' என்பான் திருவதிகைத் திருக்கோயிலில் நாடக சாலை மண்டபம் அமைத்து அதில் விளக்கெரிக்க 96 ஆடுகள் கொடை அளித்த செய்தியினை உத்தமசோழனின் கல்வெட்டு கூறுகிறது. திருவாவடுதுறையில் ஒரு நாடக சாலை இருந்தது. அது 'நானாவித நாடகசாலை' என்று அழைக்கப்பெற்றது. அதனைப் பாதுகாத்தற்கு நிவந்தமும் அளிக்கப்பெற்றது. அங்குக் கூத்தாடுவோர் சிலரும் இருந்தனர் என்று கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

பண்டைக் காலத்தில் திறந்தவெளி அரங்குகளில் நாடகங்கள் நடத்தப்பெற்றன. பல்லவர் காலத்தில் திறந்தவெளி அரங்குகள் இருந்திருக்கின்றன. மாமல்லபுரத்திற்கு மிகவும் அருகில் உள்ள சாளுவன் குப்பம் என்ற இடத்தல் அமைந்துள்ள 'புலிக் குகை' ஒரு திறந்தவெளி அரங்கு இருந்ததை நமக்கு நினைவூட்டுகிறது. கோயில்களில் முற்காலத்தில் இசை நடன, நாடக நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், கோயில் விவகாரங்களைக் கவனிப்பதற்கும் தனி மண்டபங்கள் அமைக்கப்பெற்றன. சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர நாயக்க மன்னர்கள் காலத்தில், கோயில்களில் நிருத்த மண்டபம், மகாமண்டபம், நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள் உருவெடுத்தன. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையின் ஒரு பகுதியில் நாடக அரங்கம் அமைந்துள்ளதை இன்றும் நாம் காணலாம்.

## மன்னர்கள் மடியில் நாடகம்

தென்னிந்திய மன்னர்களும் சிற்றரசர்களும் நாடகக் கலையினை தாயின் நிலையிலிருந்து பேணிப் பாதுகாத்தனர். மன்னர்களும் சிறந்த நாடக ஆசிரியர்களாக இருந்திருக்கின்றனர். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன்

'மத்தவிலாச பிரகசனம்' என்னும் வடமொழி நாடக நூலை எழுதியுள்ளான். மன்னர்கள் குடும்பத்துடன் இசை அரங்குகளிலும், நடன, நாடக மேடைகளிலும் கூடியிருந்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர் என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சோழர்கள் காலத்தில் நாடகக் கலை சிறந்து விளங்கியது. முதலாம் இராசராசனால் எடுப்பிக்கப்பெற்ற தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பல்வகையான நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அதற்குத் தனியாக ஒதுக்கீடுகள் அளிக்கப் பெற்றுள்ளன என்பதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் திருக்கோயிலில் புரட்டாசித் திருவிழாவின் போது திருமூல நாயனாரது நாடகம் நடிப்பதற்கும், ஆரியக்கூத்து ஏழு அங்கமும் ஆடுவதற்கும் குமரன் ஸ்ரீகண்டன் என்பானுக்கு நிருத்திய போகமாக நிலம் அளிக்கப் பெற்றது என்று இராசராசனுடைய கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இதே மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் திருப்பந்தணை நல்லூர்க் கோயிலில் 'ஹாஸ்யன் விக்கிரமாதித்தன் அச்சனான ராசராசநாடகப்பெரியன்' என்பான் நட்டுவப்பங்கு, மெய்ம் மட்டுப்பங்கு ஆகிய பங்குகளை உடையவனாய் விளங்கினான். இவன் தன்னுடைய பெயருடன் இராசராச நாடகப் பெரியன் என்ற பட்டத்தைப் பெற்று விளங்கியதால் இராசராச நாடகத்தில் இவனுக்கிருந்த பெரும் புலமை வெளிப்படுகிறது

இரண்டாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலில் வைகாசிப் பெரிய திருவிழாக் காலத்தில், 'இராஜராஜேஸ்வர நாடகம்' ஆண்டுதோறும் சாந்திக் கூத்தில் வல்லவனான 'திருவாலன் திருமுதுகுன்றன்' என்கிற 'விஜய ராஜேந்திர ஆச்சாரியன்' என்பவனால் நடிக்கப்பெற்றது. இதைப் பெருந்திரளான மக்கள் கண்டு களித்தனர். இந்த நாடகத்தை நடித்தவனுக்கும், அவன் வழி வந்தவர்களுக்கும் நிலம் கொடை அளிக்கப்பட்டதைக் கல்வெட்டு;

"உடையார் ஸ்ரீராஜராஜேசுவர முடையார் கோயிலிலே ராஜராஜேசுவர நாடகமாட நித்தம் நெல்லுத் தூணியாக நிவந்தஞ் செய்த நம் வாய்க்கேழ்விப்படி சாந்திக் கூத்தன்

திருவாலன் திருமுதுகுன்றனான விஜயராஜேந்திர ஆசாரியனுக்கும் இவன் வம்சத்தாருக்கும், காணியாகக் கொடுத்தோமென்று . . . . கல்வெட்டியது.''

'திருவாலன் திருமுதுகுன்றனான விஜயராஜேந்திர ஆசாரியன்' உடையார் வைகாசிப் பெரிய திருவிழாவில் ராஜராஜேசுவர நாடகமாட இவனுக்கும், இவன் வம்சத்தார்க்கும் காணியாகப் பங்கு ஒன்றுக்கும் இராஜகேசரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் நித்தம் நெல்லுத் தூணியாக நூற்றிருபதின் கல நெல்லும் ஆட்டாண்டுதோறும் தேவர் பண்டாரத்தே பெறச் சந்திராதித்தவர் கல்வெட்டுவித்து'' என்று குறிக்கிறது.

முதற் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த திருப்பாதிரிப்புலியூர் பாடலிபுரேசுவரர் கோயில் கல்வெட்டு பூம்புலியூர் நாடகத்தைக் குறிக்கிறது. 'வீரைத் தலைவனான பரசமயகோளரி மாமுனி' என்பவர் இந்த நாடகத்தை எழுதி உள்ளார். இதன் பொருட்டு இவருக்குப் பாலையூரில் நிலம் கொடை அளிக்கப் பெற்றதைத் தெரிவிக்கிறது.

மூன்றாம் குலோத்துங்கனின், திருத்தாமரைப்பாக்கம் திரு அக்னீசுவரர் கோயில் கல்வெட்டு, கூத்தாடும் தேவரான் பிரதிகங்கர் என்பார் கூத்தாடும் தொழிலில் வல்லவராய் விளங்கினார் என்று குறிக்கிறது. அவர் இறந்த பொழுது, அவருடன் பாடும் பெண் ஒருத்தியும். ஆடலில் சிறந்த ஆழ்வார் ஒருவரும் இறந்து பட்டனர். அவர்கள் இறந்த காரணத்தை நோக்கும் பொழுது நமக்கு உணர்ச்சி மேலிடுகிறது. கூத்தாடுதல், பாடுதல், ஆடுதல் ஆகியமூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள தொழில்கள் ஆதலின், அதனால் ஏற்பட்ட உறவு காரணமாகவோ அல்லது அவர்பால் ஏற்பட்ட அன்பின் பெருக்காலோ அவருடன் பள்ளிக் கொண்டிருக்கக் கூடும்.

அரசன் கூத்துக் கலையின் மேன்மையை உணர்ந்த காரணத்தால், இறந்துபட்டவர்களுடைய குடும்பத்திற்கு ஏற்பட்ட வருத்தத்தையும், இழப்பையும் போக்குவதற்காக அவர்கள் விட்டுச்சென்ற கலைக்கு உயிர் கொடுக்கின்ற வகையில், அவர்களுடைய குடும்பத்திற்கு நிலம் அளித்துள்ளான் என்பதிலிருந்து இம் மன்னனுக்கு கலையின் பால் இருந்த ஆர்வம் வெளிப்படுகிறது.

பாண்டியர்கள் காலத்திலும் நாடகக்கலை சிறந்து விளங்கியது. திருநெல்வேலி மாவட்டம், ஆத்தூரில் கிடைத்துள்ள சோமநாதஈசுவரர் கோயில் கல்வெட்டு ஆவணித் திருநாளில் ''அழகிய பாண்டியன் கூடம்'' என்னும் நாடகசாலையில் கூத்தும், 'திருநாடகம்' என்ற நாடகமும் நடத்தப்பெற்றதைத் தெரிவிக்கிறது. இது ஒரு புனித நாடகமாகும். இந்த வகை நாடகம் மத சம்பந்தமான அல்லது புராண சம்பந்தமான கருப் பொருளை மையமாகக்கொண்டு அமைக்கப்பெற்றது. சாந்திக் கூத்தன் என்பான் கூத்தை ஆடினான். ''திருமேனி பிரியா தான்'' என்னும் நாடக ஆசிரியனுக்கு இரண்டு மாநிலம் கூத்தாட்டு காணியாகக் குன்றாமொழிச் சிங்கப்பிரான் ஆன குருகுலத்தரையன் என்பவனால் கொடை அளிக்கப்பெற்றது.

பாண்டிய மன்னர்கள் நாடகத்தின்பால் பெருத்த ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால், தலைநகரமான மதுரையில், அரண்மனையின் ஒரு பகுதியில், நாடகசாலை ஒன்றை அமைத்து அதில் அவ்வப்பொழுது நாடகங்கள் நிகழ்த்தப் பெற்றன என்ற குறிப்பு கல்வெட்டில் காணப்படுகிறது.

இவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த விஜயநகர, நாயக்க, மராட்டிய மன்னர்கள் காலத்தில் நாடகக் கலை போற்றப்பட்டு வந்துள்ளது. பிற்காலத்தில் பள்ளு, குறவஞ்சி, முதலிய இசை நாடகங்கள் தோன்றின. நாடகத்தோடு நடனமும் ஒன்றி வளர்ந்தன. இதற்கு மோன நாடகம் என்று பெயர்.

இதுகாறும் கூறியவற்றால் சங்ககாலம் தொட்டு தமிழகத்தில் நாடகக் கலை சிறந்து விளங்கி வந்துள்ளது என்பதையும் முற்காலத்தில் கூத்துக்கள் மூலம் வளர்ந்த நாடகம், பின்னர் தனித்து வளரத் தொடங்கியது என்பதையும், கூத்துக்களை நிகழ்த்திய கூத்தர்களுக்கும், நாடகத்தை எழுதிய நாடக ஆசிரியர்களுக்கும், நாடகத்தில் பங்கேற்று நடித்தவர்களுக்கும், அவர்கள் வழி வந்தவர்களுக்கும் நிலம் கொடையளிக்கப்பட்ட சிறப்பினையும், சமுதாயத்தில் நாடகக்கலைக்கு இருந்த ஏற்றத்தையும் நமக்குத் தெளிவாக விளக்கிக் கூறுபவை கல்வெட்டுக்களே*

---

* *திருச்சி வானொலியில் நிகழ்த்திய உரை.*

# 13

# பூண்டி - தொல்பழங்கால மக்கள் வாழ்விடம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் பதினைந்து அகழ்வைப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வகழ்வைப் பகங்கள் அந்தந்தப் பகுதியினுடைய மக்கள் வாழ்க்கை முறை, அவர்களுடைய வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றைச் சித்திரிக்கின்ற வகையில் அமைந்துள்ளன, அந்தந்தப் பகுதி களில் மேற்பரப்பு ஆய்வின் மூலமும், அகழ்வாய்வின் மூலமும், கிடைக்கின்ற தொல்பொருட்கள் சேகரிக்கப்பட்டுப் பொது மக்கள் பார்வைக்குக் காட்சிப் பொருள்களாக இவ்வகழ் வைப்பகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வகை அகழ்வைப்பகங்களில் ஒன்றான பூண்டி அகழ் வைப்பகத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால (தொல்பழங்கால) மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள் மற்றும் இதர தொல் பொருள்கள் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கால மக்கள் வாழ்ந்த பகுதியில் இவ்வகழ்வைப்பகம் அமைந்துள்ளது மிகவும் சிறப் புடையதாகும், அவர்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் இன்றும் இப்பகுதியில் கிடைப்பது மற்றுமொரு சிறப்பாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்களுடைய நாகரிகம், பண்பாடு கலையறிவு ஆகியவற்றையும் நாம் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் பூண்டி அகழ்வைப்பகம் அமைந்துள்ளது.

சென்னையிலிருந்து திருத்தணி செல்லும் நெடுஞ்சாலை யில் 54 கி.மீ. தூரத்தில் பூண்டி உள்ளது, பூண்டி நீர்த் தேக்கத்தின் அருகில் அகழ்வைப்பகம் அமைந்துள்ளது.

பூண்டி அகழ்வைப்பகத்தில் பழைய கற்கால, இடைக் கற்கால, புதிய கற்காலக் கல்லாயுதங்களும், வெண்கலக்காலம் இரும்புக் காலம் ஆகிய காலங்களில் அக்கால மக்கள் பயன் படுத்திய ஆயுதங்களும், புதை குழிகளிலிருந்து கிடைக்கப் பெற்ற மட்கலங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர், பொன்னேரி வட்டங்கள் வழியாக ஓடும் கோர்த்தலையாற்றுப் படுகைகளில் தொல்பழங்காலக் கல்லா யுதங்கள் கிடைக்கின்றன. பூண்டியிலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களான, நம்பாக்கம், ரங்காபுரம், கிருஷ்ணாபுரம், அத்திரம் பாக்கம். குடியம், கனிப்பாளையம், வடமதுரை, ஊத்துக் கோட்டை, மாதிரிமேடு, தேவேந்திரபாக்கம், புதூர், கரடிப் புதூர் ஆகியவை முக்கிய இடத்தை வகிக்கின்றன.

திருவள்ளூருக்கு அருகில் குடியம் என்னும் சிற்றூர் உள்ளது. மனசத்தம்மன் மலைக் குன்றுகளின் அடிவாரத்தில் பழைய கற்கால மனிதன் வாழ்ந்த குகைகள் காணப்படு கின்றன. இங்குக் காணப்படும் 16 குகைகளில் மூன்று குகை களில் தான் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன, இக்குகைகளின் மேற்பகுதியில் புகை படிந் துள்ளதைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் நெருப்பின் பயனை அறிந்திருந்தனர் எனக் கொள்ளலாம்.

### அத்திரம்பாக்கம்

அத்திரம்பாக்கம் கோர்த்தலையாற்றின் வடகரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். இவ்வூருக்கு அருகில் 'பூதடி மன்னுவங்க' என்னும் ஓடை கோர்த்தலை ஆற்றோடு கலக் கிறது. சுமார் 20 அடி உயரமுள்ள படுகை ஒன்றும் இங்கு உள்ளது. இப்படுகையில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்குக் கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன.

### வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

எழுத்துச் சான்றுகள் இல்லாத காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனப்படுகிறது.

இது, பழைய கற்காலம் (1,00,000 ஆண்டுகளுக்கு முற் பட்டது), நுண் கற்காலம் (10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது), புதிய கற்காலம் (5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது)

பெருங்கற்காலம் (2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் வல்லுநர்கள் இந்தியாவில் பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கருவிகளை இரண்டு மரபுகளாகப் பிரித்துள்ளனர்.

(1) சோஹன் மரபு (2) சென்னை மரபு

## சோஹன் மரபு

வடமேற்கு இந்தியாவில் சிந்து நதியின் கிளையான சோஹன் நதிக்கரையில் ஒருவகைக் கருவிகள் அதிகம் காணப்படுகின்றன. எனவே இக்கருவிகளைச் 'சோஹன் மரபு' என்று அழைக்கின்றனர்.

## சென்னை மரபு

சென்னைக்கு அருகில் வேறொருவகைக் கருவிகள் அதிகம் கிடைப்பதால் அவற்றைச் 'சென்னை மரபு' என்று அழைக்கின்றனர்.

## பழைய கற்காலம்

தமிழ்நாட்டில் பழைய கற்கால மனிதன் வாழ்ந்துள்ளான் என்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில் அவனால் பயன் படுத்தப்பட்ட கற்காலக் கைக்கோடாரியினைக் கி.பி. 1863ஆம் ஆண்டு சென்னையை அடுத்த பல்லாவரம் என்ற இடத்தில் திரு. இராபர்ட் புரூஸ்புட் என்பவர் கண்டெடுத்தார்.

## கற்காலத்தில் தமிழர் வாழ்ந்த இடங்கள்

குடியம், அத்திரம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ரங்காபுரம், தேவேந்திரபாக்கம், வடமதுரை, மஞ்சக்கரணை, கூனி பாளையம், ஏரிக்குப்பம், ஊத்துக்கோட்டை, மதரிமேடு, புதூர், கரடிப் புத்தூர், சத்தியவேடு, போந்தப்பாக்கம், மாதபாக்கம், ரோஷ நகர், அமரம்பேடு, எருமை வெட்டிப்பாளையம், திருமுல்லை வாயில், புத்தூர், திருபெரும்புதூர், பரந்தூர், வதியூர், நாயக்கன் பாளையம், நகரி, மாவண்டூர், அரக்கோணம், புரியமங்கலம், திருமால்புரம், கீழ்வெண்பாக்கம், அம்பரீஷபுரம், தக்கோலம், அவியூர், நின்னியூர், வங்கானங்குடிக்காடு.

## கற்காலக் கருவிகள் கிடைக்கும் வேறு நாடுகள்

ஆப்பிரிக்கா, பிரான்சு, ஸ்பெயின், இங்கிலாந்து, ஹங்கேரி, பெல்ஜியம், சீனா, பர்மா, ஜாவா, வடக்கு ஆப்கானிஸ்தான், ஈரான்.

மனிதன் முதன் முதலில் இயற்கையாகக் கிடைக்கும் கூழாங்கற்களை எடுத்துக் கூர்மையாக்கிக் கருவிகளாகப் பயன் படுத்தத் தொடங்கினான்.

கைக்கோடரிகள், கிழிப்பான்கள், சில்லுகள், மழு, வட்டுகள் போன்ற கருவிகள், நிலம் அகழ்தல். மரம் வெட்டுதல் இறைச்சி வெட்டுதல், ஈட்டிமுனை சீவுதல், சுரண்டுதல் போன்ற பணிகளுக்கு, மரப்பிடிகளில் பொருத்திக் கோடாரி யாகவும் பயன்படுத்தினர். சுழற்றி வீசுதல் போன்ற காரியங் களுக்கும் இக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## வாழ்க்கை நிலை

கற்கால மனிதர்கள் இயற்கையாக அமைந்திருந்த குகைகளில் வாழ்ந்தனர். காடுமேடுகளிலும் ஆற்றுப் படுகை களிலும் சுற்றித் திரிந்தனர். வேட்டையாடுதலையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கிழங்கு, பழங்கள் ஆகிய வற்றை உண்டு பசியாறினர்.

## நுண் கற்காலம்

தமிழ்நாட்டில் நுண்கற்காலக் கருவிகளை முதன்முதலில் இராபர்ட் புரூஸ்புட் என்பவர் சாயர்புரம் (தேரிகள்) என்ற இடத்தில் கண்டுபிடித்தார்.

தமிழகத்தில் கூத்தம்புளி, கட்டலங்குளம், சாயர்புரம், நாசரேத், மெய்ஞானபுரம், தெ. கல்லுப்பட்டி, பெரியகுளம், கோடங்கிப்பட்டி, தத்தனோடை, துவரிமான், கொடுமணல், முட்டம் ஆகிய இடங்களில் இக்கருவிகள் கிடைத்துள்ளன.

கூரிய முனைகள், ஒருமுகச் செதிள்கள், இருமுகச் செதிள்கள், செவ்வகச் செதிள்கள், இருமுகப் பட்டைகள் அம்பு நுனி, தூண்டில் ஆகிய கருவிகள் நுண்கற்காலத்தைச் சார்ந்தவைகளாகும். இவை மிகச்சிறிய கருவிகள் ஆதலின் இவற்றைக் கொம்பு அல்லது எலும்பில் பொருத்தி, கத்தி, கருக்கரிவாள், ரம்பம் போன்றவைகளாக உருவாக்கிச்

சுரண்டுதல், சீவுதல், அறுத்தல் போன்ற தொழில்களுக்குப் பயன்படுத்தி வந்தனர்.

## வாழ்க்கை நிலை

வேட்டையாடுதலே இவர்களின் முக்கியத் தொழிலாகும். இயற்கையாக விளையும் காட்டுத் தானியங்களை உணவிற்காகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். மீன்பிடிக்கும் நுட்பம் தெரிந்தவர்களாகத் திகழ்ந்தனர், பழங்களையும், கிழங்குகளையும் தமது உணவாக்கிக் கொண்டனர்.

## புதிய கற்காலம்

கரடுமுரடான பழைய கற்காலக் கருவிகளை நன்கு தேய்த்து வழவழப்பாக்கிப் பயன்படுத்தத் தொடங்கிய காலம் 'புதிய கற்காலம்' என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் புதிய கற்காலக் கருவிகள் தஞ்சாவூர், சேலம், தர்மபுரி, வடஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன.

கற்கோடரிகள், உளி, கொத்துக்கருவி, வட்டக்கற்கள், அம்மி, குழவி, தோண்டுகருவி ஆகிய கருவிகள் இக்காலத்தைச் சார்ந்தவைகளாகும். இவ்வகைக் கருவிகள் நிலத்தை அகழ்ந்து எடுக்க, தானியங்களை அரைக்க, விதைகளை ஊன்ற, ஊன் தோல் போன்றவற்றைச் சுரண்ட மற்றும் மரத்தைப் பிளக்கவும் வெட்டவும், செதுக்கவும் பயன்படுத்தப்பட்டன.

இக்கால மக்கள் எலும்பாலான சில கருவிகளையும் பயன்படுத்தி உள்ளனர். உணவைச் சேகரித்து உண்டு வந்த மனிதன் உணவுப் பொருட்களை விளைவிக்கத் தொடங்கினான். உணவிற்காக அலைந்து திரிந்த மனிதன் நிலையான ஓர் இருப்பிடத்தில் தங்கி வாழ ஆரம்பித்தான். வேட்டையாடுதலைக் காட்டிலும், விளைவித்தலை முக்கிய தொழிலாக்கிக் கொண்டான். பச்சை மாமிசத்தை உண்டவன், தீயில் வேக வைத்து உண்ணத் தொடங்கினான். தண்ணீர், உணவு தானியங்கள் ஆகியவைகளைச் சேமிக்க மட்பாண்டங்களை உருவாக்கினான். தொடக்கக்காலத்தில் கோரைகளால் வேயப் பட்ட வட்ட வடிவமான குடிசைகளில் வாழ்ந்தான். இக்காலமே மனித நாகரிக வளர்ச்சியின் முதற்கட்டம் ஆகும்!